REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரு 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7   12—12—48   இதழ் 26



அணு ஆராய்ச்சியாளர்—விஞ்ஞானப் பேராசிரியர்—இயற்கைப் பொருள் ஆராய்ச்சி வல்லுநர்—தோழர் P. M. S. பிளாக்கெட்—இவருக்கு இவ்வாண்டு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது.

## பிரிக்கவேண்டும்

16-ம் பக்கத் தொடர்ச்சி

என்று பதறினலும், கூலி உயர்த்த வேண்டும் என்று கூறினலும், அகவிலை உயர்ந்திருக்கிறதே என்று அலறினலும், எங்கள் குறைகள் இது இது என்று எடுத்துக்காட்டினலும், இதனை எவர் செய்தபோதிலும்—சொந்தக் கட்சியினர் ஆயினும் சரி, மாற்றுக் கட்சியினர் ஆயினும் சரி—இவ்வளவிற்கும் ஓரே பதில்தான் கிடைக்கிறது. என்ன பதில் அது? துன்பம் நீக்கும்—துயர் போக்கும் தெளிந்த பதிலா? இல்லை-இல்லை! காங்கிரஸ் மேலிடத்தை ஆட்டிப் படைக்கும் அதிகாரம், இந்த நல்ல காரியத்தையா செய்வதற்கு, அவர்களுக்கு ஊக்கமளிக்கும்!

‘இந்தக் குறைபாடுகள் அனைத்தும் சாதாரணம்!’

‘வேறு இருக்கிறது முதலில் செய்யவேண்டியது! முதலில் கவனிக்க வேண்டியதை முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும்! இந்தச் சில்லரைகளில் கவனம் செலுத்துவதற்கு இதுவல்லத் தருணம்!’

‘கிடைத்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்! அதற்குப் பலம் பொருந்தியவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும்! எனவே பலம் பொருந்திய இராணுவத்தை உண்டாக்க வேண்டும்!’

‘இதனை—முதலில் கவனிக்கவேண்டிய இந்த முக்கிய பணியை மறந்து—மக்களின் தேவைகளை—குறைகளை—பேசிக்கொண்டிருப்பது கிடைத்த விடுதலைக்கு உலைவைப்பதாகும், எனவே மக்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறுபவர்கள் பதவி மோகங் கொண்டவர்கள்—நாட்டு நலத்தை நாடாதவர்கள்!’

இவ்வாறு அதிகாரத்திலுள்ள மேலிடத்தார், நாட்டு மக்களின் நலிந்த வாழ்வைச் சுட்டிக் காட்டுகிறவர்களை, மக்கள் சிந்தும் கண்ணீரைத் துடைக்க மார்க்கம் காண வேண்டுமென்று கேட்பவர்களை, எல்லாம் ஒரேபட்டியில் சேர்த்துப் பேசுவது போலவே, மொழிவழி மாகாணம் வேண்டுமென்று கூறுபவர்களிடமும் உள்ளெண்ணம் கற்பிக்கவும், அவர்கள் கோரிக்கை தேசியத்திற்கு விரோதமானது என்றும், பேசுகின்ற அளவிற்குத் துணிவு கொண்டுள்ளார்கள். இரண்டொரு மேலிடத்தார், கோரிக்கை நியாயமானதாயினும், அதனை அமுல் நடத்த இதுவல்லத் தருணம் என்று கூறி, காலத்தின் மீது பழியைப் போட்டு, பிரச்னையை தட்டிக் கழித்துவிடுகிறார்கள்.

மொழி வழி மாகாணம் அமைவது இன்று பயங்கரமானதோர் பிரச்னையாகக் காட்சி அளிக்கிறது காங்கிரஸ் மேலிடத்தாருக்கு. எனவே, பிரச்னையை ஆராய்ந்து அறிந்து, நீதி வழங்கப்பயப்படுகிறார்கள். கோரிக்கையைக் கிளப்புகிறவர்களும், அதனை மறுப்பவர்களும் ஒரே கட்சியினர் — கதர் சட்டையினர் என்பது குறிப்பிடத்தக்கது!

‘பிரிவினை’ வேண்டும் என்னும் மூலக்கொள்கையில் ஒருவருக்கும் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு, அவரவர்கள் வெளிப்படையாகக் குறிப்பிடும் காரணங்களில்தான் தாரதம்மியம் இருக்கக் காண்கிறோம்.

* * *

சிந்தனையைத் தூண்டிவிடும் முறையில், தோழர் S V. இராமமூர்த்தி (I. C. S.), ஆந்திர மாகாணப் பிரிவினையை வற்புறுத்திச் சில கூறியுள்ளார். அதாவது ஒரு மாகாணத்தின் நிலப் பரப்புப் பெரிதாக இருப்பதும், அதிக ஜனத்தொகையைக் கொண்டதாக் இருப்பதும், ஒழுங்காக நிர்வாகம் நடப்பதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. வங்காளம், பிரிக்கப்படுவதற்கு முன், 6 கோடி மக்களைக் கொண்டதாக இருந்தது; அதனாலேயே அங்கு பஞ்சம் ஏற்பட்டபோது, பஞ்சம் ஏற்பட்ட குறிப்பிட்ட இடத்தை—நிலப்பரப்பு பெரிதாக இருந்த காரணத்தால்—கல்கத்தாவிலுள்ள அரசியலார் நிலைமையை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியாமல் போனதோடு, தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் சக்தியும் இல்லாமல் போய்விட்டது. சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 5 கோடியாக இருக்கிறது. எனவே, திறமையான நிர்வாகம் இருப்பது முடியாத காரியம், என்று தோழர் இராமமூர்த்தி குறிப்பிட்டுவிட்டு, ஆந்திர மாகாணம் பிரிக்கப்பட்டால் 2 கோடி மக்கள் தான் இருப்பர், அதுகாலை நிர்வாகம் திறமையானதாக ஏற்பட்டுவிடும் என்றும் பேசியுள்ளார்.

அதாவது, நிலப்பரப்பு அதிகமாக இருத்தல் – மக்கள் தொகை பெரிதாக இருத்தல்—ஆகிய இரு காரணங்களால நிர்வாகம் திறமையாக இருக்காது—இருக்கவில்லை-இருக்க முடியாது. இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது வங்காளப் பஞ்சம். இவ்வாறு கூறுகிறார் தோழர் S. V. இராமமூர்த்தி. யார் இந்த நபர்? மஞ்சள் பெட்டி மகத்துவத்தில், மக்கள் பிரதிநிதிகள் என்று மகுடஞ் சூட்டிக்கொண்டு, கொலுவீற்றிருக்கும் நடமாடும் பொம்மைகளைப் போன்றவர்களா இவர்? இல்லை; நாட்டு நிர்வாக நுணுக்கங்களை அனுபவத்தின் மூலம் நன்கு அறிந்துள்ளவர். சென்னை மாகாண சர்க்காரில் பல முக்கிய பதவிகளிலே அமர்ந்து வேலை பார்த்துப் பயிற்சி

(5-ம் பக்கம் பார்க்க)

## சிறந்த நூல்கள்

1. பொதுசேவையா சொந்தத் தொழிலா 0—2—0
(சி. என். எ; மா. பொ. சி. சொற்பொழிவு)
2. ‘சமதர்மம்’ சி. என். எ. 0—4—0
3. “வீட்டிற்கோர் புத்தகசாலை” சி, என். எ. 0—2—0
4. “பேசும் பிணம்” 0—8—0
இராதாமணாளன்
5, “பெரிய இடத்துப் பெண்” மு. கருணாநிதி 0—8—0
6. “பிள்ளையோ பிள்ளை” 0—6—0
மு. கருணாநிதி
7. “நாடகக்கலையின் முன்னேற்றம் 0—6—0

## ஓர் நற்செய்தி

1949—வருடக்காலண்டர் திராவிடத் தந்தை பெரியார், அண்ணாதுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் முதலியவர்கள் உருவமைந்த கண்கவரும் அழகிய காலண்டர் தனித்தனியே மிகப் பெரிய அளவில் உயரிய வழவழப்பான ஆர்ட் தாளில் வெளிவருகிறது.

மொத்த வியாபாரத்திற்கு எழுதவும்.
வியாபாரிகட்கு தக்க இலாபம் தரப்படும்

விபரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்
P. B. 18 வேலூர் (N. A.)

# சோதியே சுடரே!

"நோய்நீங்கும்! பசி பறக்கும்! திருவண்ணாமலைக்கு வா"

—அருணாசலீஸ்வரர்

"காலரா இருக்கிறது! அரிசி கிடையாது! வராதே!"

—சர்க்கார்

ஒரே சண்டை! சண்டையென்றால் சாதாரண சண்டையல்ல. சண்டை போட்டவர்களும் எம்மையும் உம்மையும் போன்ற சாதாரண மானவர்களுமல்ல. தங்கள் வேலையை விட்டு வேறு வீண்வேலைக்குப் போக நேரம்கூட இல்லை அவர்களுக்கு. அவ்வளவு பொறுப்புடன்கூடிய அலுவல்கள்தான் அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பொறுப்பென்றால், சாதாரண பொறுப்பல்ல; ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவு வேலையை முடித்துவிட்டு மற்ற நேரங்களில் சும்மா இருப்பவர்களுமல்ல. சிறிதுநேரம் ஓய்வெடுத்துக்கொள்ளலாம் என்று கருதி, அவர்களுடைய வேலைகளை வேறு யாருக்காவது கற்றுக்கொடுத்து அவர்களைத் தங்களின் துணை வேலையாட்களாக (Assistants) வைத்துக்கொள்ளவும் இல்லை. முழுப் பொறுப்பையும் அவர்களே மேற்கொண்டிருந்தார்கள். அந்த வேலைகள் அப்படிப்பட்டவை! அந்த இரண்டு பேரைத் தவிர வேறு யாராலும் அந்த வேலைகளைப் பார்க்கமுடியாது. அந்த இரண்டு பேரும் அந்த வேலைக்கென்றே தனியாகத் தோன்றியவர்கள்! அன்றும், இன்றும், அந்த இரண்டு பேருமேதான் அந்த வேலைகளைக் கவனித்துக்கொண்டு வருகின்றனராம்!

யார் இவர்கள்? இந்த இரண்டு பேருடைய வேலைகள் என்ன? எதற்காகச் சண்டை போட்டுக் கொண்டனர்? என்பனவற்றை அறியவேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் உண்டாகாமல் இருக்கமுடியாது.

திருவண்ணாமலையிலே, கார்த்திகைத் திங்கட் கிருத்திகை நாளிலே, ஆங்குள்ள மலையுச்சியில் ஆண்டுதோறும் ஏற்றப்படும் விளக்கொளியைப் பற்றி அறியாதார் தமிழ் நாட்டில் இல்லை என்றே கூறலாம். இந்த நிகழ்ச்சிதான் மேலே குறிப்பிட்ட சண்டைக்கு அடிப்படைக் காரணமாகும். ஒருவர் பிரம்மா, இன்னொருவர் விட்டுணு. பிரம்மாவுக்குப் படைப்பு வேலை, விட்டுணுவுக்குக் காப்பு வேலை. உலகத்தைப் படைக்கும் பிரம்மாவுக்கும், அதனைக் காக்கும் திருமாலுக்கும்தான் மேலே குறிப்பிட்ட சண்டை ஏற்பட்டது திருவண்ணாமலையில்! படைக்கும் பிரம்மாவும் காக்கும் திருமாலும் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டு வரும் நாளில் ஒருநாள் எதிர்பாராதவிதமாகத் திருவண்ணாமலை என்னும் ஊரில் சந்தித்தனர். சந்தித்தவுடனே ஒருவரையொருவர் நலம் வினவி அளவளாவிக் கொண்டனரா? இல்லை. திருமால் பிரம்மாவை நோக்கி, "வாரும் நான்முகனாரே! உம்முடைய படைப்புத் தொழில் ஒழுங்காக நடக்கிறதா" என்றோ, பிரம்மா திருமாலை நோக்கி, "வாரும் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனே! உம்முடைய காக்குந் தொழில் ஒழுங்காக நடக்கிறதா" என்றோ கேட்டனரா? இல்லை! இல்லை!! சந்தித்ததும் சண்டைபோட்டுக் கொண்டனர்.

திருமால், தம்முடைய தொழிலின் உயர்வை எடுத்து விளக்கிக் கூறித் தாமே, பெரியவர் என்றார்.

நான்முகன், தம்முடைய தொழிலின் மேன்மையை எடுத்துவிளக்கித் தாமே பெரியவர் என்றார்.

இதுதான்சண்டைக்குக்காரணம்.

படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மா பெரியவரா? அல்லது காக்குந்தொழிலைச் செய்யும் திருமால் பெரியவரா? என்பது அவ்விருவராலுமே முடிவு செய்யப் பெறாமல், சண்டை பலகாலமாகநடைபெற்றுக் கொண்டிருந்தது. வாய்ச்சண்டை, கைச்சண்டையாக மாறி விடவே, நிலைமையும் மிகவும் மோசமாகிவிட்டது, மலைகள் நொருங்கின! அண்டமுகடு வெடித்தது! சந்திரனும் சூரியனும் அச்சங்கொண்டு ஒளிந்துவிட்டனர்! ஆதிசேடன் நெளிந்துவருந்தினான். விண்மீன்கள் உதிர்ந்துவிழுந்தன! உலகங்கள் எல்லாம் அடுக்குக் குலைந்தன! கங்கை முதலான யாறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது! ஏழு கடல்களும் சேறாகிவிட்டன! ஊர்ந்தும் நடந்தும் செல்கின்ற உயிர்கள் எல்லாம் பறந்தன! மகாமேருவும் அசைந்தது! இந்தச் சண்டையின் காரணமாகப் படைப்பு வேலையும் காப்பு வேலையும் தடைப்பட்டுவிட்டது. தடைப்படவே, பிரம்மா படைத்ததையும் திருமால் காத்ததையும் அழிப்பதற்கு ஒருவர் இருக்கிறாரே, அவருக்கு வேலையில்லாது போயிற்று போகவே, அவர் படைக்கும் பிரம்மாவையும் காக்கும் திருமாலையும் தேடினார். பல இடங்கள் சுற்றியலைந்து கடைசியாகத் திருவண்ணாமலைக்கு வந்தபோது, இரண்டுபேரும் அங்கே சண்டை போட்டிருப்பதைக் கண்டார். கிட்ட நெருங்கிப் பார்த்தார். அவர்கள், சண்டை போடும் காரணத்தையும் அறிந்தார். எந்தவிதமான சமாதானத்தாலும் சண்டை நிற்காதென்பதையும் உணர்ந்தார். உடனே ஒரு யோசனை அவருக்குத் தோன்றியது. அவர், அவ்விருவரையும் நோக்கி, "உங்கள்சண்டை தீருவதாகத்தெரியவில்லை. இதனால், படைப்பதும், காப்பதும், அழிப்பதும் ஆகிய மூன்று முதன்மையான தொழில்களும் தடைப்பட்டுவிட்டன. எனவே, நான் சொல்லுகின்றபடிகேட்பீர்களானால், உங்களுடைய சண்டையும் தீர்ந்துவிடும், எங்களுடைய தொழிலும் ஒழுங்காக நடக்கும்" என்றார். அவர்களும் அதற்குஇசைந்தனர். உடனே அழிக்கும்தொழிலைச்செய்யும் ஆசாமி அந்தஇடத்தில்(திருவண்ணாமலையில்) ஒரு அனல் வடிவமாகத் தோன்றி, "ஓ, பிரம்ம விட்டுணுக்களே! இந்த ஒளியின் அடிமுடிகளை யார் முதலில் கண்டு வருகிறாரோ அவரே பெரியவர் என்பதாக முடிவுசெய்யப்படும்" என்றார். அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டு, திருமால் ஒருபன்றி வடிவெடுத்து அடியைத் தேடவும், நான்

முகன் ஒரு அன்னப்பறவை வடிவெடுத்து முடியைத் தேடவும் புறப்பட்டனர். பன்றி வடிவெடுத்துச் சென்ற பரந்தாமன், அரைக்கணத்திற்கு ஆயிரங்காத தொலைவு செல்லக்கூடிய வேகத்தில்பூமியைத்துளைத்துக்கொண்டு, அதல—விதல-சுதல—தலாதல—மகாதல—ரசாதல—பாதாளம் ஆகிய ஏழு உலகங்களுக்கும் சென்று, மேலும் மகாபலிச்சக்கரவர்த்தி காவலிருக்கின்ற போகவதிப்பட்டினத்தையும் தாண்டி, அதற்குமேலும் ஆடகேசுரம் என்ற உலகிற்கும் அதற்கப்பாலும்சென்று அடியைக் காணமுடியாமல், திரும்பி வந்து "என்னால் முடியவில்லை" என்று கூறிவிட்டார். அன்னப்பறவை வடிவெடுத்துப் பறந்து சென்ற நான்முகன் பலகாலம்வரை பறந்துகொண்டே போயும் முடியைக் கண்டுபிடிக்க முடியாமல் களைத்து ஒரு இடத்தில்தங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில், அழிக்கும் தொழிலைச் செய்யும் சிவனுடைய சடாமுடியில் இருந்த ஒரு தாழம்பூ தவறிவிழுந்து கீழே வந்துகொண்டிருந்தது. அதனைக்கண்ட நான்முகன், தாழம்பூவை வழிமறித்து நிறுத்தி, "நீ எங்கிருந்து வருகின்றாய்" என்று கேட்டனன். அதற்கு, அது, "நான் சிவனுடைய சடாமுடியினின்றும் தவறி விழுந்து இதோவந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறிற்று. உடனே நான்முகன், "நீ சிவனுடையசடாமுடியினின்றும்புறப்பட்டு எவ்வளவு நேரமாகின்றது" என்று கேட்டான். அதைக் கேட்டதும் தாழம்பூ ஒரு கேலிச்சிரிப்புடன், "எவ்வளவு நேரமென்று கேட்கிறாய்? நான் புறப்பட்டு வந்து இன்றோடு நாற்பதினாயிரம் தேவ ஆண்டுகள் ஆகின்றன" என்று கூறிற்று.

பிரம்மா இடிகேட்ட நாகம்போல் திகைத்துப் போனான். என்னசெய்வதென்று தெரியவில்லை. ஒரேகலக்கம், குழப்பம்! ஏன் இந்தச் சண்டையில் இறங்கினோம் என்று கூட எண்ணிக் கவலைப்பட்டான். பின்னர் ஒருவாறு தெளிவடைந்தான். படைக்கும் தொழில் அல்லவா பிரம்மாவுக்கு! படைத்தான் ஒரு யோசனையைத் தன் அறிவுத் திறமையினால். உடனே தாழம்பூவை நோக்கி, "நீ இப்போது எனக்கு ஒரு உதவிபுரிய வேண்டும்; அதாவது, நான் இம்மலையின் முடியைக் கண்டதாகப் போய் கூறுவேன், அப்போது, நீ, அவ்வாறுகண்டது 'மெய்தான்' என்று கூறவேண்டு"மெனக் கேட்டுக்கொண்டான். தாழம்பூவும் அதற்கிசைந்தது. உடனே பிரம்மா தாழம்பூவையும் தம்முடன் அழைத்துக்கொண்டு பூமியை நோக்கி வந்து, ஆயிரம் தேவ ஆண்டுகள் வரை அடியைத் தேடியும் காணாமல் அலுத்துப்போய் வந்திருக்கும் திருமாலை நோக்கி, "ஏ விட்டுணுவே! நான் இந்த ஒளிமலையின் முடியைக் கண்டு, நான் கண்டதற்குச் சாட்சியாக இதோ சிவனாரின் சடாமுடியிலுள்ள தாழம்பூவையும் அழைத்து வந்திருக்கிறேன்" என்று கூறினான். இதைக் கேட்டதும் அங்கு நின்ற சிவவடிவமான நெருப்புமலை வெடித்தது. அந்த வெடிப்பொலியால் உலகங்கள் எல்லாம் நடுக்கமுற்றன. அந்த வெடிப்பினின்றும் சிவன் தோன்றி, நான்முகனை நோக்கி "ஏ நான்முகனே! நீ இப்போது அகங்காரத்தினால் பொய்கூறினாய்" என்று கூறிச் சினநகை புரிந்தார். சிவன் அவ்வாறு நகைத்தபோது, அண்டபகிரண்டங்களெல்லாம் நடுநடுங்கிப் போயின! சூரியசந்திரரின் ஒளிமங்கி விட்டது! ஏழுமேகங்களும் மறைந்தன. ஒளிவடிவத்தில் நின்றமலை வெடித்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியைவிட, சிவனுடைய நகைப்பு அதிகமான அதிர்ச்சியைக்கொடுத்து, அண்டசராசரங்களையும் அவதியுறச் செய்துவிட்டது! முன்பு ஒரு முறை இப்படித்தான் இந்தச்சிவன் தம்முடைய நகைப்பினால் முப்புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கி இருக்கிறார். அப்பா! மிகவும் பொல்லாதவர் போல் இருக்கு இந்தச் சிவம்! யாராவது ஒருவர் ஏதாவது ஒருதவறு தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்டால் இந்தச் செந்தண்மை பூண்ட சிவனுக்குச் சினமும்—சினங்கலந்த நகைப்பும் வந்துவிடுகிறது. சினமோ நகைப்போ இரண்டும் கெடுதலையே உண்டாக்குகின்றன. இதனால் தான் போலும் தமிழ்மக்கள் இந்தச் சிவனைத் தங்களுடைய கடவுளாக ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்! எவருக்கும் சினம் ஏற்படுவது இயல்புதான். ஆனால், அது, இவ்வளவு கொடுமைகளை உண்டாக்கக் கூடியதாக இருக்காது—இருக்கக் கூடாது. சிவனுக்கு நான்முகன் பேரில் ஏற்பட்ட சினம் நானிலத்தைதையும் நடுங்கும்படி செய்துவிட்டதை எண்ணும்போதுதான், "வேண்டாமப்பா இப்படிப்பட்ட ஒரு கடவுள் நமக்கு" என்று யார்தான் கருதாமல் இருக்கமுடியும்!

என்ன அந்த நகைப்புக்குள்ள ஆற்றல்!

அண்டங்கள் அதிர்ந்தன!

அட்டதிக்கு யானைகள் அலறித் துடித்தன! சந்திர சூரியர் ஒளியை இழந்தனர்!

மேகங்கள் மறைந்தன! நிலையான பொருள்கள் எல்லாம் நிலை குலைந்தன! மரங்கள் எல்லாம் கரிந்து பொரிந்துபோயின!

தேவர்கள் திடுக்கிட்டனர்!

என்றால், நம்மைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அம்மியே ஆகாயத்தில் பறக்கும்போது, ஆலிலை என்ன பாடுபடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இது மட்டுமா இந்தச் சிவனுடைய லீலை! இன்னும் பல உள. அவற்றையெல்லாம் இங்கு விளக்கப்புகின் அதுவே ஒரு பெருங் கதையாய் முடியும். எனவே, இங்கு எடுத்துக்கொண்ட பொருள் வேறுதலால் அதுபற்றிய விளக்கத்தை இனி ஆராய்வோம்.

நான்முகன் பொய் கூறியதைக் கண்டு சினமடைந்த சிவன் நான்முகனை நோக்கி, "நீ இப்போது என் முடியைக் கண்டதாகப் பொய் கூறினமையால், இன்று முதல் உனக்குப் பூவுலகத்தில் கோயில் இல்லாமற் போவதோடு, உனக்குப் பூசை வழிபாடுகளும் இல்லாமற் போகக் கடவது" என்றுசாபமிட்டு, அதன்மேல், அவனுக்குச் சாட்சியாக வந்து பொய் கூறிய தாழம் பூவை நோக்கி, "நீ இந்தப் பொய்யனாகிய பிரமனோடு சேர்ந்து இவனுடைய சொல் கேட்டுப் பொய்ச்சாட்சி கூறியபடியினாலே உன்னை இன்று முதல் தீண்டேன்; அதுமட்டுமல்ல, உன் மணம் உன்னை அணிந்து கொள்பவர்களால் நுகர்ந்தின்புற முடியாமற் போகக் கடவது" என்றும் சாபமிட்டார்.

இந்தச்சாபத்தை ஏற்றுக்கொண்ட நான்முகன் தன் குற்றத்தை உணர்ந்து சிவனாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மன்னிப்பை ஏற்றுக்கொண்ட சிவன், நான்முகனை நோக்கி, "என்னுடைய சொற்படி உனக்குக் கோயிலும் பூசையும் இல்

(13-ம் பக்கம் பார்க்க)

## பிரிக்க வேண்டும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றுள்ளவர். சர்க்காரின் பிரதம காரியதரிசியாக இருந்து, நிர்வாகத்திலே குறைபாடு எங்கே இருக்கிறது? அதற்கான காரணங்கள் எவை எவை—அதனைப் போக்குவதற்குள்ள வழி வகை என்ன—என்று தெள்ளத் தெளிய அறிந்துள்ளவர். அவர் கூறுகிறார், அதிக எண்ணிக்கையான மக்கள்—பெரிய நிலப்பரப்பு-நிர்வாகத்திறமையைக்கெடுக்கிறது என்று. வங்கத்தைக் காட்டி, பல லட்சம் மக்கள் பஞ்சத்தால் மடிந்ததைக்காட்டி, இதனைத் தடுக்க சக்தியற்றுக் கிடந்த நிர்வாகச் சீர்குலைவைக் காட்டி, தமது வாதத்தை மெய்ப்பிக்கிறார் தோழர் இராமமூர்த்தி.

கல்கத்தாவிலிருந்து இருநூறு மைல்களுக்குள் பஞ்சம் ஏற்பட்டதும், அந்தச் செய்தி கல்கத்தாவிலுள்ள சர்க்காருக்கு எட்டுவதற்கும், அதனைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கும் உள்ள காலத்தில், பல இலட்சம் மக்கள் இறக்கும் நிலை ஏற்பட்டதென்பது உண்மையானால், அப்பாசமுத்திரத்தில் பட்டினியால் செத்துமடியும் நிலையிலுள்ள அப்பாசாமியின் அபயக்குரல், அப்பாசாமியும் இறந்து, அவன் மகன் குப்புசாமியும் மண்ணில் புதைக்கப்பட்ட பின்னராவது, டில்லியிலே இருக்கும் அதிகார தேவதைகளுக்குக் கேட்கும் என்று எப்படி நம்புவது? நிலைமையைத் தெரிந்து கொள்வதற்கே நீண்டகாலம் பிடிக்கிறதென்றால், தகுந்த நடவடிக்கையை டில்லி எடுத்துக்கொள்ளுவதற்குள், நாட்டில் எத்தனைய கேடுகள்—மாற்றங்கள் நிகழ்ந்து விட வழி ஏற்பட்டுவிடும் என்பதை எவ்வாறு சிந்திக்காமல் இருக்க முடியும்?

நாம், இனத்தைக் காட்டி, மொழியின் மூலத்தைக் காட்டி, பூகோள அமைப்பின் உண்மையைக் காட்டி, பழக்க வழக்கத்தின் அடிப்படை ஒற்றுமையைக் காட்டி, வரலாற்றுச் சுவடுகளின் வளத்தைக் காட்டி, வாதிடுகிறோம், வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையோடு, 'திராவிட நாடு' அமைப்பதற்காக; இதனை எவரும் மறுத்துக் கூறவில்லை, இது வரை, அறிவின் துணையைக் கொண்டு. ஆனால் தங்களது ஆற்றலை, நமக்கு அச்சமூட்டும் ஆயுதம் என்று தவறாகத் தீர்மானித்துக் கொண்டு, நமது 'திராவிட நாடு' கோரிக்கையைத் தகர்த்துவிடச் சல்லடம் கட்டுகிறார்கள். நமது பலம், முயற்சி முதலியனவற்றைச் சுட்டிக் காட்டி, நமது கோரிக்கையின் நியாயத்தை, மறுத்துவிட்டதாக, மனத்துள் மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள் சில குறுகிய மதியினர்.

ஆனால், ஒன்றைமட்டும் அவர்கள் மறந்துவிடாமல் இருக்கவேண்டும். 'பிரிவினை' வேண்டும் என்னும் அடிப்படையில் அனைவருக்கும் ஒற்றுமை இருப்பதை நாம் மறந்தாலும், அவர்களால் மறக்க முடியாது. இன்று வெளியிடப்படும் காரணத்தில் வேற்றுமை இருப்பினும், உள்ளத்தில் உறைந்து கிடக்கும் உண்மை, எவ்வளவு முயற்சித்த போதிலும் மறைக்கப்பட முடியாமல் என்றைக்காவது ஒரு நாள், மக்களிடம் உலவத்தான் போகிறது. அந்த நல்ல நாளும் அதிக தூரத்தில் இல்லை; விரைவில் வந்துகொண்டுதான் இருக்கிறது. மொழிவழியா, பூகோளவழியா, இனவழியா-எதன்படி பிரிவினை ஏற்பட்டால், மக்கள் வாழ்வு பெறுவர் என்ற பிரச்சினை எழத்தான் போகிறது. இதற்கான முடிவு, நமது கோரிக்கையில், கேலிக்கும் கண்டனத்துக்கும் இன்று உள்ளாக்கப்படும் நமது கோரிக்கையில், "திராவிடநாடு" அமைப்பில், இணைந்து இருப்பதைக் காண்பர். திராவிட நாடும் உருவாகி, எதிர்பார்த்தபடி, வளமார் திராவிடமாக இருக்கும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம். இதற்குச் சில காலம் பிடிக்கலாம்; காத்திருப்போம் அதுவரை; கைகட்டி அல்ல, நமது அணிக்கு ஆள் திரட்டிக் கொண்டு. இதுவே நமதுபணி; பிறர் கேலிக்கும் கண்டனத்துக்கும் சாய்ந்துவிடாத பெரும்பணி. நம்மைக் காயந்தோரும், நமது அணிக்கு நெருங்கி வருவது, நமக்கு ஊக்கமளிக்கிறது, என்பது மட்டுமல்ல, நமது கோரிக்கை நிறைவேறும் காலத்தையும் குறைக்கிறது என்று பொருள்.

காரணம் வெவ்வேறானாலும், பிரிக்கவேண்டும் என்னும் குரல் வலுக்கிறது; எங்கெங்கோ இருந்தும் கிளம்புகிறது! ✻

# வரவேற்பு

—✻—

5—9—48ல் திருவத்திபுரத்தில், சர்க்காரால் தடைசெய்யப்பெற்ற "இரண்ணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தை நடித்துச் சிறை புகுந்த காஞ்சிபுரம் தோழர்கள்,

வே. சம்பந்தம், ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம். சண்முகம், பி. கச்சபாலயம் எம். கணபதி, வி. கோபால், எம். இராசமன்னார், கே. சுப்பிரமணியம், இ. எதிராஜ் வி. என். [illegible] பி. நாராயணசாமி. திருவத்திபுரம் தோழர் ப. சு. பூங்காவனம் ஆகியோர் 22—12—48ல் வேலூர் சிறையினின்று விடுதலை பெறுகின்றனர்.

25—12—48ல் காஞ்சிபுரம் திராவிடர் கழகச் சார்பில்,

## வரவேற்பு

அளிக்கப்படும். மேற்படி நிகழ்ச்சி காஞ்சித் திராவிடர் மறுமலர்ச்சிக் கழக மைதானத்தில் தோழர் அண்ணாத்துரை தலைமையில் நடைபெறும்.

சிறைசென்று மீண்ட தோழர்களுக்கு வரவேற்பு இதழ் அளிக்க விரும்பும் காஞ்சீபுரம் தோழர்களும், காஞ்சியை அடுத்துள்ள திராவிடர் கழகத் தோழர்களும் தங்கள் வரவேற்பிதழ்களை அச்சிட்டு ஒரு நாள் முன்னதாகவே கொண்டுவந்து "திராவிட நாடு" ஆபிசில் சேர்த்துவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந் நிகழ்ச்சிக்கு வெளியூர்த் தோழர்கள் பலர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திராவிட நாடு
காஞ்சி] 12—12—48 [ஞாயிறு

# தலால் தர்பார்

கண்ணீர் விடுகிறானா? கருணை காட்டாதே! பசி-பட்டினி என்று பேசுகிறானா? வெறும் பசப்பு-பரிகாரம் தேடுவதாகக் கூறாதே! எதிர்த்தால்—அடக்கு—சுட்டுத் தள்ளு—சமரசம் பேசாதே—சாந்தபோதனை செய்யாதே!

கூலி போதவில்லை—படிச்செலவு அதிகம் வேண்டும்—என்று கேட்ட வண்ணந்தான் இருப்பான் பாட்டாளி. அவன் பேச்சுக்கு மதிப்பளிக்காதே!

கெஞ்சுவான்—மனம் இளகாதே! மிஞ்சுவான் மனம் மருளாதே! உறுதிகொள்! உரத்த குரலில் பேசு!

ஆர்ப்பரித்தால், அடக்க முடியும் என்பதைக் காட்டு.

கிளர்ச்சி செய்தால், நசுக்கு.

போலீஸ் இல்லையா! ராணுவம் இல்லையா? இவை எதற்காக உள்ளன?

பாட்டாளிகளிடம், யாரும் சென்று பேச, உறவாட, சங்கம் வைக்க அநுமதிக்காதே.

அரசியல் கட்சிக்காரனுக்கு அங்கென்ன வேலை, என்று கேள். அதட்டிப் பேசு.

தொழிலாளர் சங்கத்தைத் தொழிலாளரே நடத்த வேண்டும், என்று கூறிவிடு.

வேலை நிறுத்தம்செய்வது, பொது ஜன விரோதமான காரியம் என்று திட்டமாகக் கூறு.

பலவான் என்பதைக் காட்டு! பசப்புக்கு மயங்காதே! பயத்தால் பதைக்காதே! பாட்டாளியின்கடமை பாடுபட வேண்டியது என்ற நீதியை நிலைநாட்டு.

உன் கரம் வலுவாக இருக்கட்டும்—கண்களிலே உறுதிஒளி விடட்டும்—குரலிலே, முடுக்கு இருக்கட்டும். இரக்கம்—இன்மொழி பேசுவது—இதோ செய்கிறேன், நானே செய்கிறேன் என்று நல்வாக்குக் கொடுப்பது—இவைகளை மறந்துவிடு.

ஆளவந்தோர்களே! சுருக்கமாகக் கூறுகிறேன், இருதயத்தை எடுத்து எறிந்துவிடுங்கள் வெளியே!

இல்லாதானிடம் இரக்கம் காட்டுவது இயற்கை நீதியல்லவா, என்ற ஏட்டுச்சுரை, நாட்டை ஆளும் உங்களுக்குக் கூடாது.

அவன் கரத்திலே சம்மட்டி! உங்கள் கரத்திலே, துப்பாக்கி!!

* * *

இந்நாட்டு, முதலாளிகள் சார்பிலே, சர். ஆர்தேஷிர் தலால், இது போலச் சர்க்காருக்குப் புத்தி கூறுகிறார். இதே சொற்கள் கொண்டல்ல, இந்தக் கருத்துப்படப் பேசியிருக்கிறார் நவம்பர் 20ந் தேதி-பம்பாயில்.

சர். தலால், இந்நாட்டை இன்று ஆட்டிப் படைக்கும் ஒரு பத்துக் கோடீஸ்வரர்களிலே, ஒருவர்.

டாடா, பிர்லா, பஜாஜ், தலால், சிங்கானியா, எனும் சில குடும்பத்தாரே, இன்று, இந்திய துணைக்கண்டத்தின், பொருளாதாரப் பூபதிகள் என்பதை அனைவரும் அறிவர். அவர்களின் சக்தியும், சாகசமும், சர்க்காரை, முறையே முறிக்கவும், மயக்கவும், கூடியவை. அவர்களின் தொடர்பு உலகிலே உள்ள மற்ற நாட்டு முதலாளிகளுடன்—குறிப்பாக, அமெரிக்க முதலாளிகளுடன். அவர்களின் கரம் படாத தொழில் இல்லை—அவர்களின் சிரம் அசைந்தால் சர்க்காரின் போக்கே மாறிவிடக்கூடும்—அவ்வளவு பண பலம் படைத்தவர்கள்.

* * *

நேரு, பட்டேல், பிரசாத், போஸ், போன்ற,விடுதலைப்போர் வீரர்களின் புகழ் பரவியுள்ள அளவுக்கு, இந்த டாட்டா பிர்லாக்களின் புகழ் நாட்டு மக்களிடையே பரவியதில்லை. மகாராஜாக்கள், ராஜாக்கள், ஜெமீன்தார்கள் என்போர், கடன்பட்டாவது 'தகம்பப்பொடி' தூவிக்கொண்டு, கோலாகலமாக வாழ்ந்துகொண்டு, யானை குதிரை பரிவாரங்களுடனும், பாட்டு ஆட்டம் பாவையருடனும், படாடோபமாகக் காட்சி தந்ததால், பாமர மக்களுக்கு அவர்களிடம், துவக்கத்திலே அச்சமும், பிறகு அருவருப்பும் அலட்சியமும் தோன்றியது. ஆனால் இப்படிப்பட்ட மகாராஜாக்களைக் கடன்காரர்கள் ஜாப்தாவில் குறித்து வைத்த இந்த டாட்டா பிர்லாக்கள், மக்கள் கண்களிலேயே அதிகம் படுவதில்லை—அவர்களின் ஆடம்பரத்தைக் கண்டு அருவருப்புக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் சாதாரண மக்களுக்கு ஏற்பட்டதில்லை. மக்களின் கண்களுக்கு, மகாராஜாக்களும், தேசபக்தர்களும், தெளிவாகத் தெரிந்தனர்—இம்மூன்று சாராரையும், அதாவது, பொதுமக்கள், சுகபோகிகள், விடுதலை வீரர்கள், ஆகிய மூவரையும், மிஞ்சக்கூடிய அளவு பணபலம் பெறுவதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்துவந்ததுடன், இலாப வேட்டையைத் திறம்பட நடத்தி, இங்கிலாந்தையே, கடன்கார நாடாக்கிக் காட்டினர், டாட்டா பிர்லாக்கள். பல போராட்டங்கள், பல சிறைவாசங்கள், இவைகளுக்குப் பிறகு மட்டுமே, நாட்டை ஆளும் வாய்ப்பும் வலிவும் பெற முடிந்தது, நேரு பட்டேல் ஆகியோரால். டாட்டா பிர்லாக்களோ, ஒரு துளியும் விடுதலைப் போருக்காகக் கஷ்டப்பட்டதில்லை — துரைமார்களின் சீற்றம் அவர்களைச் சுட்டதில்லை—போராட்டங்களிலே அவர்கள் ஈடுபட்டு, பொன்னையும் பொருளையும், இழந்ததில்லை—ஆனால், நாடாளும் நேருவுக்கு நாடாளும் வாய்ப்பும் வலிவும் கிடைப்பதற்கு நெடுநாட்களுக்கு முன்பிருந்தே, இந்த டாட்டா பிர்லாக்களுக்கு, அந்தச் செல்வாக்கு இருந்தது.

வேவலாட்சியின் போதும் இவர்களின், ஏவலர் பலர், சர்க்காரிலே இருந்தனர்! லின்லிதோ பிரபு ஆட்சி செய்தார், இவர்களுக்கு அப்போதும் செல்வாக்குத்தான். மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் இவர்கள் கொஞ்சியபடிதான் இருந்தனர், நேரு சர்க்காரிலேயும் இவர்களுக்கு பழைய இடம் — பழைய செல்வாக்கு—இருக்கத்தான் செய்கிறது.

முன்பு, புன்சிரிப்புடன் பேசுவர் இந்தப் பணந்தேடிகள்! இப்போது, புருவத்தையும் நெரிக்கிறார்கள்.

முன்பு, வெள்ளையர் ஆட்சியின் போது—ஜாடைமாடையாகப் பேசுவர்—இப்போது — நேரு சர்க்காரின் போது—கண்டிப்பாகவே பேசுகிறார்கள்.

வெள்ளையர் ஆட்சியின் கடைசி நாட்களுக்கும், நேரு சர்க்காரின் துவக்க நாட்களுக்கும் இடையே, இந்த டாட்டா பிர்லாக்கள், இரண்டு மூன்று தலைமுறைகள் பாடுபட்டால் மட்டுமே பெறக்கூடிய அளவு, இலாபம் பெற்று, தொழிற்சாலைகளை அல்ல, பல நாடுகளையே விலைக்கு வாங்கக்கூடிய அளவு, பண பலம் பெற்றுவிட்டனர். பணபலம் என்றால், அவர்களிடம் ரொக்கமாக உள்ளது, பாங்குகளில் உள்ளது, ஆபரணக் குவியல், ஆகிய இவற்றை மட்டுமல்ல, நாம் குறிப்பிடுவது—இவை, மரத்திலிருந்து பறிக்கப்பட்ட, உதிர்ந்த, பழங்கள்—நாம் குறிப்பிடுவது பழம் தரும் மரத்தை!—மரத்தினை மட்டுமல்ல, மரம் பயிரிடுவதற்கான, விதைகளை! பண உற்பத்திச் சாதனம், அவர்களிடம் மிக அதிகமான அளவு குவிந்துவிட்டது. பொதுமக்கள், அன்னியர் பிடியிலே சிக்கிச் சீரழிகிறோமே என்ற சோகத்தில் மூழ்கிக்கிடந்தனர் — பொறுப்புணர்ச்சியுடையோர் அன்னிய ஆட்சியை ஒழிக்கப் போரிட்டபடி இருந்தனர்-அதேபோது, இவர்கள், பண பலத்தை—பண உற்பத்திச் சாதனத்தை, மிக மிகத்திறமையுடன், தயாரித்துக்கொண்டு விட்டனர். இன்று, ஒரு பெரிய துணைக் கண்டத்தை அவர்கள் விரும்புகிறபடி ஆட்டிப்படைக்கமுடியும், என்ற நிலைமை வளர்ந்துவிட்டது.

* * *

கலியாணத்தன்று இரவு காலட்சேபம்—ருக்மிணி கலியாணக் கதை—அரைத் தூக்கமாக இருந்தபோதிலும் ருக்மிணியைக் கிருஷ்ணன் தேரிலே தூக்கிக்கொண்டு போகிற கட்டத்தைப் பெருந்திரளான மக்கள், கேட்டு ரசித்துக்கொண்டிருக்கின்றனர்—அதேபோது, கைகாரக் கள்ளன், கலியாண வீட்டாரின் இரும்புப் பெட்டிக்குக் கள்ளச்சாவி போடுகிறான் — களவாடுகிறான் — ஓடியும் விடுகிறான். திறமையாகத் தானே செய்தான், என்று அவன் செயலை மற்றக் கள்ளர்கள்கூடப் பாராட்டுவர்; அவ்வளவு 'சுத்தமாக'க் களவாடுகிறான். கதை முடிந்து காலை மலர்ந்த பிறகுதான், கா கூ எனக் கூச்சல் கேட்கிறது—கள்ளன் அதற்குள் சீமானாகிவிட்டான்!

* * *

நாட்டு விடுதலைப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மக்களின் மனமும், மக்கள் மனதைத் தம் வயப்படுத்தி வைத்திருந்தவர்களின் கவனமும், வெள்ளையரின் கொள்ளை பற்றிப் பதிந்திருந்தது—அப்போது டாட்டா பிர்லாக்கள், இலாபக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டனர். வெள்ளையரை விரட்டி அவர்கள் காலத்தில் சிறைக்கூடமாக இருந்த செங்கோட்டையைக் கைப்பற்ற முடிந்தது விடுதலை விரும்பிகளால்; ஆனால், இந்த இலாபக் கோட்டைகள், சரியவில்லை! சர்க்காரைச் சவாலுக்கு அழைக்கிறார்கள். சமதர்மப் பேச்சுப் பாணம், சமயா சமயத்திலே பேசப்படும் காரசாரமான பேச்சுப் பாணம், இவைகள் யாவும், அந்தக் கோட்டையின் வெளிப்புறச் சுவரைக்கூடத் துளைக்க முடியாது, பொடிப் பொடியாகின்றன! உள்ளே இருந்துகொண்டு, அவர்கள்—பணந்தேடிகள்—கொக்கரிக்கின்றனர்.

* * *

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், துவக்கத்திலே, இந்த துணைக்கண்டத்தை, நேரடியாகவே சுரண்டிக் கொண்டு வந்தது.—சுரண்டும் முறைகளையும் சுரண்டுவதற்கான கருவிகளையும் தயாரிக்கவும், தயாரித்த கருவிகளைப் பயன்படுத்தும் பக்குவம் தெரிந்தவர்களுக்குப் பயிற்சிதரவும், சில பல வருஷங்கள் பிடித்தன — ஒரு நூற்றாண்டு காலம், ஏகபோகமாகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், இந்தச் சுரண்டலை நடத்திவந்தது-டாட்டா—பிர்லா—பஜாஜ்—கூட்டம், இல்லை—தேவைப்படவில்லை.

நேரடியாகவே சுரண்டலை நடத்திக்கொள்ளக்கூடிய விதத்திலே, சமூகநிலை ஒரு நூற்றாண்டுக்காலம் வரை இருந்துவந்தது. மக்களுக்கு விழிப்புணர்ச்சியே இல்லாத நிலை—மாயாப்பிரபஞ்ச மனப்பான்மையும், ஆங்கிலேயனை இங்கு ஆளும்படி ஆண்டவனேதான் அனுப்பிவைத்தான் என்ற நம்பிக்கையும்—வெள்ளைக்காரன் விஷ்ணு அம்சம் என்ற வெட்டிப் பேச்சும்—பரவி இருந்த காலம். கொக்குச்சுட உபயோகமாகும் துப்பாக்கியைக் காட்டியே கோட்டைகளைப் பிடித்துவிடக்கூடிய சூழ்நிலை இருந்த காலம். கட்டப்பொம்முக்களைக்காட்டிக்கொடுக்கக் காட்டு ராஜாக்கள் முன்வந்த காலம். காப்பியும் தேயிலையும் மலையிலும் காட்டிலும் பயிரிடலாம், சோலாரில் தங்கம் எடுக்கலாம், என்ற விஷயங்களை மக்கள் அறியாத காலம். ரயில் அதிகம் ஓடாதகாலம்! வெள்ளையர் இந்தச் சூழ்நிலையிலே, தங்கள் சுரண்டல் காரியத்தைத் துவக்கினர் — ஒரு நூற்றாண்டு வரையிலே, சிரமம் இல்லை—கூட்டுத் தோழர் தேவைப்படவில்லை — புள்ளிமான்கள் ஏராளம், புலிக்குக் கொண்டாட்டம்.

* * *

ஒரு நூற்றாண்டுக்குள், மக்களிடம் விழிப்புணர்ச்சி முளைத்து, எதிர்ப்புணர்ச்சியாக மாறிவிட்டது. வெள்ளைக்காரன் இங்கு கொண்டு வந்து விற்கும் விதவிதமான சாமான்கள், இங்கிருந்து மலைமலையாகக் கொண்டுபோகும் மூலப்பொருள்களைக் கொண்டு செய்யப்படுவதுதான்—என்ற உண்மைகள் தெரியலாயின. அதுவரை பஞ்சாங்கத்தை மட்டுமே பார்த்துவந்த கண்களுக்கு, அட்லாஸ் தெரியலாயிற்று. அட்லாசைப் பார்த்தபிறகு, விடுதலை ஆர்வம் எப்படித் தோன்றாமலிருக்க முடியும்! இந்திய துணைக்கண்டத்தின் படத்தின் அளவையும், அதனை ஆட்டிப்படைக்கும் பிரிட்டன் படத்தின் அளவையும் பார்த்துவிட்டு வெட்கப்படாதவர்கள் இருக்க முடியுமா? எனவே, விழிப்புணர்ச்சி வீறு கொண்டெழுந்தது. வெள்ளையர், சரி இனி, நமது சுரண்டல்முறையை மாற்றிக்கொள்ளவேண்டும்என்று தீர்மானித்தனர்—சுரண்டல் முறைக்கு, 'சுதேசிகளை'த் தரகர்களாக்கிக் கொண்டனர். அப்படிக் கிளம்பியவர்கள், சுரண்டலில் சிறுசிறு பாகம் தமது பங்காகப் பெறலாயினர்—சிங்கம் தின்றதுபோகச் சிதறியதைச் சிறுநரிகள் தின்றுகொழுப்பது போல! மக்களிடம்விழிப்புணர்ச்சியும் எதிர்ப்புணர்ச்சியும் பலப்படப் பலப்பட, சுதேசி சுரண்டல்காரர்களின் தொகையும் பலமும், வளருவதற்கு, வெள்ளை ஏகாதிபத்யமே, அனுமதித்தது, உதவியும் செய்தது. ஏகாதிபத்யத்தின் செல்லப்பிள்ளைகளாகி, சட்டம் ஒழுங்கு ஆகியவைகளைப் பற்றிப் போதனை புரிபவர்களாகவும், ஆகி, இலட்சாதிகாரிகளாகி, கோடீஸ்வரர்களாகவுமாகி விட்டனர். பணம் திரட்டியது கூட அல்ல, அவ்வளவு முக்கியமான விஷயம்! பணம்; குட்டையில் உள்ள நீர் போன்றது—

எடுத்து உபயோகித்தாலும் குட்டை, வெளியாகும் — உபயோகிக்காமலே இருந்தாலும், தேங்கிச் சேறாகி, காலத்தால் உலர்ந்தே போகும். பணம் திரட்டியது அல்ல, முக்கியம்; பணம் திரட்டும் வழியை, முறையை, அறிந்துகொண்டனர். அமெரிக்காவிடமிருந்து ஒரு அணு குண்டை விலைக்கு வாங்கி வைத்துக் கொள்வதைவிட, அணுகுண்டு தயாரிக்கும் முறையையும் அதற்கான சாதனத்தையும் பெறுவதுதானே, அதிகமான, உண்மையான ஆபத்து. அதுபோலவே, பணத்தை மட்டும் இவர்கள் மூட்டை கட்டி வைத்துக் கொண்டார்கள் என்றால் கூட ஆபத்து அதிகம் இல்லை, பணத்தை உற்பத்தி செய்வதற்குரிய கருவியை அமைக்கக் கற்றுக்கொண்டனர். எனவேதான் இவர்களால், இன்று, இறுமாப்புடன் பேசமுடிகிறது.

பஞ்சத்தை அவர்கள்கோபம்உண்டாக்கும். அவர்கள்மனம்வைத்தால், பசி போகும்! அவர்களால், வேதனையை வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்க முடிகிறது! அவர்களே மனம் வைத்தால், வேலையும் வாழ்க்கையும் தர முடிகிறது! அவர்களின் கண்ணோட்டம், காடுகளைப் பட்டணமாக்குகிறது, அவர்களின் கடும்பார்வை, பட்டணங்களைக் காடுமாக்கி விடுகிறது.

மார்க்கட்டுகளில், திடீரெனப் பண்டங்கள் குவிவதும், 'மாயமாக' மறைவதும், விலைகள் படுபாதாளம் போவதும், திடீரென உயர்வதுமாக, பல 'சித்துகள்' நடைபெறும், இந்தச் சீமான்கள் விரு ம்பினால். டெலிபோன் அருகே உட்கார்ந்தபடி அவர்களால், மக்களை அல்லோலகல்லோலப் படுத்த முடியும்! வங்கப் பஞ்சம் வருவதும், வர்க்கப் போராட்டம் எழுவதும், அவர்களின் திருவிளையாடல் திறமையினாலேதான்.

* * *

"ஹலோ! ஹலோ! பேசுவது யார்?"

"நமஸ்தே! நமஸ்தே!"

"ராம்! ராம்! ரவிசந்த்! மார்க்கட் எப்படி இன்று?"

"எந்த மார்க்கட்?"

"பொதுவாகத்தான், ரவி"

"பொதுவாகவா? விசேஷம் ஒன்றும் இல்லை."

"விசேஷம் இல்லையா? ஏன்! சரி. மெட்ராஸ் மார்க்கட்டிலே, சோப் பார்ஸ், சஸ்தாவா?"

"சஸ்தாத்தான்! கேட்பாரேகிடையாது"

"விலை, ரொம்ப இறக்கமோ?"

"ஆமாம்—படிக்குப் பாதி கூட இல்லை"

"அரே ராம், அரே ராம்! அப்படியா ஆகிவிட்டது. சரி. ரவிசந்த்! மார்க்கட்டிலே, இப்பவே, புகுந்து, சோப் பூராவும்—ஸ்டாக் பூராவும் வாங்கியிடு—உடனே"

"அரே, விஷயம் தெரியாமே பேசறீங்க சேட்! ஒரு வாரத்திலே, அமெரிக்கா சோப், ஒரு கப்பல் வரப் போகுது—மார்க்கட் நியூஸ்—அதனாலேதான், கடைக்காரரெல்லாம், ..........."

"சோப்பை தள்ளி விற்கிறானுங்களா? நல்லது ரவிசந்த்! வாங்கிவிடு மொத்தமும்—உடனே."

"நஷ்ட வியாபாரத்திலே ஏன் சேட் இவ்வளவு இஷ்டம்?"

"அரே, நம்பள் கஷ்டம் கண்டு ராம்ஜி உதவி செய்யாமல் போக மாட்டார். சோப் பூரா வாங்கி, கிடங்கிலே ஸ்டாக் செய்துவிடு. யார் கேட்டாலும், 'இல்லை' ன்னு சொல்லணும்."

"சரி"

"நமஸ்தே"

* * *

சோப்பு சிந்துவாரற்றுக் கிடந்தது; டெலிபோன் பேச்சு முடிந்ததும், மார்க்கட்டிலேஇருந்த சோப் முழுவதும், சேட்ஜீயின் கிடங்குக்குப் போய்விட்டது. மறுநாள் மார்க்கட்டில் சோப் கிடையாது. மலிவாகக் கிடைத்து வந்த சோப் 'மாயமாக' மறைந்தது, ஏன், என்பது மக்களுக்குத் தெரியாது. அமெரிக்கா சோப் வந்துதான், இனி வியாபாரம் என்று கடைவீதியிலே பேச்சு. மாலை பத்திரிகையிலே ஒரு சிறு குறிப்பு வெளிவருகிறது, மார்க்கட்டிலே, மருட்சி ஏற்படுகிற விதமாக.

* * *

வெளிநாட்டுச் சோப்புகளை இறக்குமதி செய்வதைத் தடுக்கலாம் என்ற யோசனை, சர்க்காரில் இருப்பதாக, டில்லி வட்டாரத்திலே நம்பிக்கையான இடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவை, இந்தப் போக்குப் பாதிக்குமா, என்பது பற்றி, இந்திய சர்க்காரின் வெளிநாட்டு இலாகா தீவிரமாக யோசித்து வருகிறது.

* * *

இந்தச் செய்தி வெளிவருகிறது; மார்க்கட் மருளுகிறது—அமெரிக்கா சோப் கிடைக்காது என்று கவலை பிறக்கிறது. உள்ளூர் சோப் கம்பெனிகள், மார்க்கட் மந்தமாக இருந்த காரணத்தால், உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தன. எனவே மார்க்கட்டில் சோப்புப் பஞ்சம்! ஏற்படுகிறது.

* * *

மீண்டும் டெலிபோன்! இம்முறை வெற்றிச் சிரிப்புடன்.

"ரவிசந்த்! மார்க்கட் எப்படி?"

"சோப்பஞ்சம் சேட்ஜி. பார் விலை ஒன்றுக்கு மூன்றாகிவிட்டது.

"பிளாக்கில் எப்படி?"

"நாலு-சிலசமயம் ஆறு கூட"

"தள்ளிவிடு—பாதி இப்படி, பாதி அப்படி!"

"சேட்ஜி! அமெரிக்காசோப் வரப் போவதில்லையாம்—மார்க்கட் தத்தளிக்கிறது—ஒரு வாரம் போனால் நல்லது, விலை, இன்னும் ஏறும்."

"அரே, ஏறுவதும் இறங்குவதும் அதனிடமா, ரவி, இருக்கு. இரண்டே நாளில் ஸ்டாக் பூராவையும், தள்ளிவிடு. ரவி! மனசிலே போட்டு வை. அமெரிக்கா சோப் பூராவும், நாம்பளாதான்வாங்கி இருக்கான்.

"ராம்! ராம்! நம்பளுக்கு அந்த யோசனை தோணல்லே, சேட்."

"ராம்கி ஜேய்!"

* * *

பார் ஆறணா விதம் வாங்கிய சோப், இரண்டு ரூபா விதம், மளமளவென்று விற்றுவிடுகிறது. சோப், இனி, வெளியே இருந்து வரவே போவதில்லையாம், அதனாலே, முன் ஜாக்ரதையாக, ஒன்றுக்கு மூன்றாகச்

சோப்புக் கட்டிகள் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது, என்று சரோஜா சொல்ல, சீனுவாசன், சக்ரபாணி செட்டியார் கடைக்குச் சென்று, ஐயா, அப்பா, என்று கெஞ்சி, இரண்டு சோப் கட்டிகள் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, சரோஜாவின் புன்சிரிப்பைப் பரிசாகப் பெறுகிறான். டெலிபோன் மூலம், சேட்ஜி, நடத்திய 'சிறு சித்து' அவருக்கு நாற்பதாயிரம் தந்தது. இவ்வளவுக்கும், இவர், சோப் வியாபாரி அல்ல! அவர் ஜவுளி உற்பத்தியாளர் தான்! இந்த வியாபாரம், வெறும் நிலாச் சோறு!!

* * *

இலாபவேட்டையை, எப்படி நடத்துகிறார்கள்—மார்க்கட்டை அவர்களால் என்ன பாடு படுத்தி வைக்க முடிகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு இது. இது கட்டெறும்பு அளவு; டாட்டா பிர்லாக்கள் விளையாடும் 'சித்துகள்' காட்டெருமை அளவிருக்கும்!! இவ்வளவும், மக்களை மாய்க்கும் மாடாகம், என்று தலைவர்கள் பேசத்தான் செய்கிறார்கள்; இது மக்களைக் கெடுக்கும் ஈனகாரியமென்று ஆசிரியர்கள் தீப்பொறி பறக்கத் தீட்டித்தான் காட்டுகிறார்கள்; தேவைகளைக் குறைத்துக் கொண்டால் திருட்டு வியாபாரம் தானாக ஒழிந்துபோகும் என்று உபதேசம் செய்துதான் பார்க்கிறார்கள், வாய்ப்பெரியவர்கள்! ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இலாபத்துக்குப் பயன்படுத்தும் வித்தையையும், சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்ளும் வித்தையும், பணந்தேடிகளுக்குத் தெரியும்.

* * *

உற்பத்தி, தேவையான அளவு இருந்தால், விலைவாசி, கட்டுக்கு அடங்கி இருக்கும்—வாழ்க்கைச் செலவு, சராசரி மக்களால் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவு இருக்கும். இது அரிச்சுவடி. ஆனால் இதனையே, டாட்டா பிர்லாக்களால், புரியமுடியாத சிக்கலாகவுமாக்கிவிட முடிகிறது—மிகச் சமர்த்தாகச் செய்கிறார்கள் இந்தக் காரியத்தை. உற்பத்தி பெருகவேண்டும், என்ற உயர்ந்த கோட்பாட்டை வலியுறுத்துவர்—பொதுமக்களின் சார்பில் சர்க்காரும் சம்மதிக்கும் — தொழிலாளருக்கு உபதேசிக்கப்படும்—உற்பத்தியும் பெருகும்—ஆனால் எப்படிப் பட்ட பண்டங்கள்? — பொதுமக்களுக்கு அவசியமாகவும் அவசரமாகவும், அன்றாடம் தேவைப்படும் பொருளா?—அதுதான் இல்லை—இலாபந்தரக் கூடிய பொருளின் உற்பத்திதான் பெருகும்! ஆப்ரிக்க மார்க்கட்டிலே, ஒரு தினுசு ஆடைக்குக் கிராக்கி அதிகரித்திருக்கிறது, இலாபம் ஏராளமாக வரும், என்றால் அந்த 'ரக' ஆடைகள்தான் மலையெனக் குவியும்—உள்நாட்டுத் துணிப் பஞ்சத்தைப் போக்கக்கூடிய விதமாக அல்ல. உற்பத்திப் பெருக்கம், இலாப வளர்ச்சி தருவதாக



**டாக்டர் சுகர்ணோ.**

இந்தோனேஷியாத் தலைவர்—விடுதலைப்போரை வீரமாக நடத்தி, உலகம் வியக்குமளவுக்கு வெற்றி பெற்றவர், டாக்டர் சுகர்ணோ சின்னாட்களில், இவர், இந்தியா வர இருக்கிறார்.

இருந்தாலொழிய, அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதில்லை. ஊருக்குபதேசி, ஓயாமல் கூறுவார், நாட்டிலே பண்டங்கள் மேலும் மேலும் உற்பத்தியாகவேண்டும், அப்போதுதான், தேவைக்கு ஏற்ற அளவு பொருள் மார்க்கட்டுக்கு வந்து சேரும்—உடனே விலை, கட்டுக்கு அடங்கும், என்று கூறுவார்—அரிச்சுவடியை நம்பிக்கொண்டு — பணந்தேடிகளிடம் தயாராக இருக்கும் அக்ரமச் சுவடியை மறந்து.

* * *

பொருள் உற்பத்தி, தேவையான அளவு இல்லை, எனவேதான் இவ்வளவு தொல்லை என்று பேசும்போது, நியாயமாகவே தோன்றும்—ஆனால், சற்று ஆர அமர யோசித்தால், மற்றோர் உண்மையும் தெரியவரும். உற்பத்தி அதிகமாகி, மக்கள் பொருளை வாங்கும் சக்தியை இழந்துபோய், மார்க்கட் மந்தமாகி, தொழில்கள் தூங்கி, வேலையில்லாக் கொடுமை தலைவிரித்தாடியதும் உண்டு—கருத்துக்கு எட்டாத காலத்தில் நடந்ததல்ல, நமது நாட்களிலேயே, பார்த்திருக்கிறோம். வெளிநாடுகளிலே, அதிகமாகப் பண்டம் உற்பத்தியாகிவிட்டதால் அவ்வளவும் மார்க்கட்டுக்குச் சென்றால் விலை, படுத்துவிடும் என்பதற்காக, கணக்குப் பார்த்து, பண்டத்தில் ஒருஅளவை, பாழாக்கியும் இருக்கிறார்கள். பிரேசில் நாட்டில் காப்பிக்கொட்டை, மிக அதிகமாகிவிட்டதால், காப்பிக் கொட்டையின் விலை விழுந்துவிடும் என்று பயந்த, அந்நாட்டு பிர்லாக்கள், சதியாலோசனை செய்து, காப்பிக் கொட்டையைக் கொளுத்திப் பாழாக்கினர், என்பது பாட்டிகதை அல்ல—உலகு அறிந்த உண்மை. உற்பத்தி பெருகவேண்டும் என்பது உலக மக்களின் நலனுக்காக என்று பேசுகிறார்களே, அது உண்மையானால், காப்பிக்கொட்டையைக் கரியாக்குவார்களா! எவ்வளவு ஏழையாக இருந்தாலும், காப்பிக்கொட்டையைப் பெறக்கூடிய அளவு, பண்டம் உற்பத்தியாகிவிட்டது, என்று மகிழ்ந்து, வாரி வழங்கியிருக்கமாட்டார்களா? உற்பத்தி பெருகவேண்டும் என்று உள்ளத்தில் கள்ளமில்லாதவர்கள் கூறுவதையே, சிலந்தி மனங்கொண்ட சீமான்கள், இலாப வேட்டைக்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர். கள்ளன் கன்னமிடுவதில், விளக்கைத் தூண்டிவிடுவது, படுத்துறங்குவோர்மீது பரிவுகொண்டா!!

* * *

உற்பத்தி குறைவது—பெருகுவது, இரண்டும், இலாப நோக்கத்துக்காக அவர்கள் போடும் திட்டமேயாகும். இந்தச் சூட்சமத்தைப் பல சந்தர்ப்பங்கள் நன்கு வெளிப்படுத்தியுமிருக்கின்றன—சர்க்காரும் அறிவர்—அறிந்து என்ன செய்ய முடிகிறது. சீறினால், அவர்கள் சிரிக்கிறார்கள்! வேண்டிக்கொண்டால், அவர்கள் கையை விரிக்கிறார்கள். எச்சரிக்கை செய்தால் அவர்கள் புருவத்தை நெரிக்கிறார்கள். பொதுமக்களின் கண்களுக்குத் தெரிய

வில்லை—ஆனால் ஒரு போர், நடந்த வண்ணம் இருக்கிறது—இன்றைய ஆட்சியாளர்களுக்கும், முதலாளிகளுக்குமிடையே—ஒவ்வொரு போர்ச் சம்பவமும், முதலாளித்துவத்துக்கு வெற்றி தந்து வந்தபடிதான் இருக்கிறது.

* * *

உற்பத்தி பெருகவேண்டும், என்ற காரணத்தை, அவர்கள் மிகத் தந்திரமாகத் தமது சுயநலனுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அது மட்டுமா? உற்பத்தி பெருகத்தானே வேண்டும்? என்று சர்க்காரைக்கேட்கிறார்கள்—ஆம்—என்று கூறுகிறது சர்க்கார்—அப்படியானால், உற்பத்தி குறைவதற்கு என்ன காரணங்கள் என்பதுபற்றி யோசித்தீரா? என்று இரண்டாவது கேள்வியைப் பூட்டி, அதற்குப்பதிலளிக்கும் முறையிலே, பாட்டாளிகளின் மீது பாயும்படி சர்க்காருக்கு யோசனை கூறுகிறது,

எப்படி உற்பத்தி பெருகும்? தொழில் வளர மார்க்கம் இல்லையே? தொழிலில் நாங்கள் படும் தொல்லையைக் கவனிப்பாரில்லையே! எவ்வளவுதான் கூலியை உயர்த்தினாலும், பாட்டாளி, திருப்திப்பட முடியாது என்கிறான்—கூலியை உயர்த்து என்கிறான்—போனஸ் கொடு என்கிறான்—என் உழைப்பாலல்லவா என்று பேசுகிறான்—சங்கமாம் ஸ்ட்ரைக்காம்—அவன் எங்களைப்படுத்துகிற பாடு, இவ்வளவு அவ்வளவு அல்ல. தொழிலாளரின் போக்கு மாறினால் ஒழிய—மாற்றப்பட்டால் ஒழிய—உற்பத்தி பெருகாது—என்று கூறுகிறார்கள். பம்பாயில் தலால் பேசிய தன் கருத்து இதுதான். யந்திரங்கள் எப்படிவேலைசெய்கின்றனவோ, அது போலப் பாட்டாளிகள் வேலைசெய்ய வேண்டும்—அவர்களை நடத்திச் செல்லும் பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொண்டால் உற்பத்தி பெருகும்—என்று கூறுகிறார். அதாவது, சர்க்காரை, பாசிச முறைக்குத் தயாராகும்படி கூறுகிறார். இது செய்யாவிட்டால் 'பொது உடைமைப் பூதம்' எல்லோரையும் சேர்த்து விழுங்கிவிடும்—என்று பயம் காட்டுகிறார்.

ஆகவே பாட்டாளியை அடக்கு—கம்யூனிஸ்டுகளை ஒடுக்கு—தொழிலாளர் சம்பந்தமாகத் தலையிடுபவன் யாராக இருந்தாலும்—காங்கிரசைச் சார்ந்த நாராயணசாமிகளாக இருந்தால் கூட, விடாதே, பிடித்து அடை சிறையில், என்று தலால் கூறுகிறார்—தன் நன்மைக்காக! இலாபத்துக்காக என்று கூறுகிறாரா, இல்லை, இல்லை, நாட்டு நன்மைக்காக! என்று பேசுகிறார்!!

உற்பத்தி பெருகவேண்டும், ஆகவே, ஆளவந்தோரே,! உரிமைப் பேச்சை ஒழித்துக்கட்டுங்கள், என்று கூசாமல் கூறுகிறார், தலால்.

* * *

புதிதாகப் பீடம் ஏறியுள்ளவர்களுக்கு தங்கள் நாட்களிலே, மக்களுக்கு, புதிய வாழ்வு பிறக்கவேண்டும்—பஞ்சமற்ற பிணியற்ற அதிர்ப்தியற்ற வாழ்க்கை இருக்க வேண்டும், என்ற எண்ணம், இருக்கிறது—நெடுநாட்களாக ஆயிரமாயிரம் மேடைகளிலே, பேசியிருக்கிறார்கள்—வாக்களித்திருக்கிறார்கள்—சூளுரைத்திருக்கிறார்கள். மக்களோ என்றுமில்லாத அளவு கஷ்டம், எங்குமில்லாத அளவு கஷ்டப்படுகிறார்கள். எவ்வளவு பெரிய கதர்ச் சால்வை கொண்டு மூடினாலும், நிலைமை, மறையவில்லை. எங்கும், இல்லை—இல்லை—என்ற பேச்சுத்தான்! என் செய்வர்?

மக்கள், கேட்கிறார்கள், "ஏன் மனச்சோர்வு கொள்கிறீர்கள்? எம்மை ஈடேற்றும் வழி தெரியாது திகைக்கக் காரணம், என்ன? நீங்களே கூறியிருக்கிறீர்களே! தொழில்களை, இலாப வேட்டைக்காடு ஆக்கினதால்தான், நாட்டிலே மிருக உள்ளம் படைத்த மனிதர்கள் தோன்றிவிட்டனர்—இனி மக்களுக்காகத்தான் தொழில்கள் இலாபத்துக்காக அல்ல, மக்களின் நன்மைக்காக!—என்றெல்லாம் கூறினீர்களே.—திட்டம் தீட்டிக் காட்டினீர்களே—பொதுமக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொழில்களை எல்லாம் சர்க்காரே ஏற்று நடத்தும், என்று சூள் உரைத்தீர்களே! இந்தத் திட்டத்தை யார் எதிர்த்தாலும் அடக்கியே தீருவோம் என்றீர்களே! நன்றாகக் கவனமிருக்கிறதே, வெண்கல நாதத்தில், தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம், என்று நீங்கள் பாடிய பாரதி கீதம். ஆற்றல் மிக்கோரே! எமது அன்பிற்குரியவர்களே! எம்மை ஆளவந்தாரே! ஏன் தயக்கம், தடுமாற்றம்? திட்டத்தை நிறைவேற்றுங்கள்! தொழில்களைப் பொதுவாக்குங்கள்! சர்க்கார் உடைமையாக்குங்கள்! ஊரைக் கருவிலேயே அழியுங்கள்!! என்று கூறுகின்றனர். மக்களின் குரலிலே, வேதனையும் ஆத்திரமும் சம எடையிலிருக்கிறது.

"மகாஜனங்களே! கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்! தொழில்களைத்தேசியமயமாக்கும்திட்டத்தை நாங்கள் விட்டுவிடப் போவதில்லை. ஆனால், அவசரம் ஆகுமா? சர்க்காருக்கு, இந்தத்தொழில்களை எல்லாம் ஏற்று நடத்தும் சக்தி வரவேண்டும், காலம் வரவேண்டும். ஒரு பத்து வருஷம், பல்லைக் கடித்துக்கொண்டு இருந்துவிடுங்கள் பிறகு, திட்டத்தை நிறைவேற்றலாம். இடையிலே, உற்பத்தியைப் பெருக்குங்கள்—ஓய்ந்து விடாதீர்கள்—காய்ந்து கிடக்கும் வயல்களைப் பசுமையுறச் செய்யுங்கள்—தூங்கிக் கிடக்கும் புதை பொருள்களை எழுப்பி வெளியே கொண்டு வாருங்கள்—கட்டுக் கடங்கா ஆறுகளை, ஆற்றல் தரும் வழிகளாக்குங்கள்—உற்பத்தியைப் பெருக்குங்கள்—பெருக்குங்கள்—என்று சர்க்கார் கூறுகிறது.

பாட்டாளி சிரித்துக்கொண்டே அழுகிறான்!

நான் வயிறார உணவில்லை, என்று கூறி, எனக்கு வாழ்வு அளிக்கச் சொல்கிறேன்—நீயாகவே, முன்பு வாக்களித்தாயே என்பதால்.—நீ, என்னைக் காய்ந்த வயிற்றைப் பிறகு பார்த்துக்கொள், உற்பத்தியைப் பெருக்கு என்று கூறுகிறாயே, அப்பனே! ஆளவந்தோனே! உற்பத்தி என்றால் என்ன, உத்தியோக உத்திரவு போலவா, எழுதிவிட! உயிரைப் பணயம் வைத்து, உழைத்து, உருக்குலைந்து அல்லவா, உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அணுவணுவாக எங்களை உழைப்புச் சிதைக்கிறது, மாடி மாடியாக முதலாளிக் கோட்டை உயருகிறது. நீ மேலும் உழைக்கச் சொல்கிறாய்!! செய்யலாம் என்றாலும், சக்தி இல்லையே! உழைத்து அலுத்துக் கிடக்கும் எங்களிடம், அதிகரித்த உழைப்பை எதிர்பார்க்கிறாயே! குமுறும் நெஞ்சினராகிவிட்ட எங்களை, குப்புற விழாதே குப்பா! எழுந்திரு வேலை செய், என்று கட்டளையிடுகிறாயே! எப்படியப்பா எங்களால் முடியும்?

சக்தி வேண்டுமே உழைக்க! சாந்தி வேண்டுமே மனதில்! அதற்கு, என்ன வழி?—என்று பாட்டாளிகள் கேட்கின்றனர் — இவ்வளவு தெளிவாக அல்ல—தங்கள் கண்ணீராலும் பெருமூச்சாலும்!

கண்ணீர் விடுகிறான்! கருணை காட்டாதே!!—என்று சர்க்காருக்குக் கூறுகிறார், சர். தலால்!! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும்?

பாட்டாளிகளை அடக்குப்படி சர்க்காருக்குக் கூறுவது மட்டுமா, சர்க்காரே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கும், தலால், ஓர் நல்வழி(!?) கூறுகிறார்!

தொழில்களை சர்க்காரே ஏற்று நடத்தப் போவதாகக் கூறுகின்றனர், பத்தாண்டுகளுக்குப் பிறகு, முதலாளித்வ முறை முறியடிக்கப்படும் என்றும், பொறுப்புள்ள தலைவர்கள் நாடாள்வோர் கூறுகின்றனர். பத்து வருஷங்களுக்குப் பிறகு, இழந்துவிடத்தானே போகிறோம், இதற்காக நாம் ஏன் பாடுபட்டு, நமது திறமையைச் செலவிட்டு, முதல் போட்டுத் தொழில் நடத்த வேண்டும்? என்று, எண்ணி, முதலாளிகள், அக்கரையற்றுள்ளனர்.

தொழிலில் கிடைக்கும் இலாபத்தின்மீது சர்க்கார் போடும் வரி, அதிகமாக இருக்கிறது—ஆகவே, சாமர்த்தியமாக வேலை செய்து இலாபம் சேர்த்து அதைச் சர்க்காருக்குக் கொட்டிக் கொடுக்க வேண்டுமா, என்று யோசிக்கும்போது, தொழில்களை அக்கரையுடன் கவனிக்க, முதலாளிக்கு மனம் வருவதில்லை.

இதனால், புதிய தொழில்களைத் துவக்கி, அதில் பெருந்தொகை 'முதல்' போட, முதலாளிகள் முன் வருவதில்லை.

தலால், பேசுகிறார் இதுபோல. பணம் போடமாட்டோம் தொழிலில்! உற்பத்தி பெருக வேண்டும் என்பதிலே, அக்கரை காட்டமாட்டோம்! எங்கள் இலாப வேட்டைக்குத் தங்கு தடை விதிப்பதானால், நாங்கள் வேலை நிறுத்தம் செய்து விடுவோம். பணம் பதுங்கிக்கொள்ளும்—வெளியே வராது! தொழிற்சாலைகள் புதிதாக ஏற்படமாட்டா! பொருள் குவியாது!—என்று எச்சரிக்கை செய்கிறார்.

தொழில்களைத் தனி உடைமையாகவே விட்டுவிடவேண்டும்; இலாபத்திலே சர்க்கார், வரி என்ற பெயரால் குறிப்பிடக்கூடிய பங்கு பெறுவதோடு, பாடுபட்டவர்கள் என்ற பாத்யதை கொண்டாடித் தொழிலாளர்கள் பங்கு கேட்பதோ கூடாது.

இதற்குச் சம்மதித்தால், நாங்கள், எங்களிடம் உள்ள 'முதலை' வெளியே விடுவோம்—இல்லையேல், 'புதைத்து வைப்போம்' என்று கூறுகிறார்.

கூறுவது, வெறும் மிரட்டல் அல்ல. இப்போதே, வேலை நிறுத்தம் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு, தொழில்களைத் தேசியமயமாக்கும் திட்டம்பற்றி யோசிக்க மாட்டோம் என்று நேரு சர்க்கார் கூறிப் பார்த்தது.

பொதுஉடைமைக் கட்சியினரை வேட்டையாடிப் பிடித்துச் சிறையில் தள்ளிக் காட்டிற்று.

தொழிலாளர்கள் சில வருஷகாலம், சமரச மனப்பான்மையுடன் இருக்கவேண்டும் — வேலைநிறுத்தங்களில் ஈடுபடக் கூடாது—உற்பத்தி பெருக உழைக்க வேண்டும், என்றுகூறி, பாட்டாளிகளின் உணர்ச்சியை ஒடுக்கிக் காட்டிற்று.

துணிந்து வேலைநிறுத்தங்கள் செய்தவர்களிடம் பேச, துப்பாக்கியை அனுப்பிக் காட்டிற்று.

முதலாளிகளைக் குறைகூறியும் கண்டித்தும் பேசுவது கூடாது என்று, இலட்சிய வாதிகளுக்குக்கூட உபதேசம் செய்து காட்டிற்று,

முதலாளித்துவத்துக்கு மரியாதையும், உத்தரவாதமும் தந்துபார்த்தது.

வேலைநிறுத்தத்தில் தொழிலாளரை இழுத்துவிடக்கிளம்பும் சங்கங்களை முறியடிக்கப் போட்டிச் சங்கங்களை அமைத்துக் காட்டிற்று.

இங்ஙனம், முதலாளித்வ முறைக்கு, மாலையிட்டு உபசரித்து, மரியாதை தந்து மனமகிழச் செய்து பார்த்தும், தலால் "இது போதாது! தொழில்களைத் தேசிய மயமாக்கத்தான் போகிறோம், சில வருஷங்கள் கழித்து—பத்தாண்டுக்குப் பிறகு யோசிக்கப்போகிறோம் என்று பேசுவதே கூடாது. அந்த எண்ணத்தையே விட்டுவிடவேண்டும். அப்படி, அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டால், வேறு அரசியல் கட்சிகள், எதிர்ப்பிரசாரம் செய்யுமே என்று அஞ்சவும் கூடாது. முதலாளித்துவமுறைக்குச்சாகாவரம் வேண்டும்—நீண்டநாளில்லை அதனை என்று உறுதிகூறவேண்டும்—அப்படிச் செய்தாலொழிய நாட்டிலே புதிய தொழில்கள் அமைக்க, நாங்கள் பணம் போட முன்வரமாட்டோம், என்று கூறி விட்டார் தலால்.

கூலி போதவில்லை, என்று குடிசையில் இருக்கும் குப்பன் கூப்பாடு போட்டால், புரட்சி செய்கிறான், பொது உடைமை பேசுகிறான், மாஸ்கோவாதிகுன், என்று பேச, ஏசக் கிளம்பும் கண்ணியர்கள் ஏராளம். பாட்டாளி, பட்டினியைப் போக்கிக்கொள்ள, கூலியை உயர்த்திக்கொள்ள வேலைநிறுத்தம் செய்தால், தடியடி, சிறை, தூக்குமேடை, துப்பாக்கிக் குண்டு!

இலாபவேட்டை எங்கள் உரிமை— இதிலே தலையிட எண்ணினால், தடைகள் விதித்தால், தர்மோபதேசம் செய்தால், நாங்கள், வேலைநிறுத்தம் செய்வோம், என்று மாளிகையிலே வீற்றிருக்கும் தலால்கள் மமதையுடன் பேசுகின்றனர்—சர்க்கார், என்ன செய்கிறது! சர்தார் படேல் அதேதினம், வேறோர் இடத்திலே பேசுகிறார், "தாங்கமுடியாதவரிப் பளுவினால் முதலாளிகள் தத்தளிக்கிறார்கள்" என்று.

குடிசையில் குமுறுபவனுக்குக் குண்டாந்தடியடி! மாளிகை மதோன்மத்தருக்கு, இந்த உபசாரமொழி!!

பம்பாயில் சர். தலால், பேசியதுபோல, முதலாளித்துவத்தின்மீது கைவைக்கக் கூடாது—பாட்டாளியை அடக்கியே தீர வேண்டும்— இலாபத்திலே பங்கு கேட்கக்கூடாது, என்று, நேருசர்க்கார் ஏற்படாதமுன்பு, தலாலே பேசியிருந்தால், நேரு எவ்வளவு சீறியிருப்பார்—நேரு கட்சியினர் எவ்வளவு கொதித்திருப்பர்!

இப்போது? தலால் துணிவுடன் பேசுகிறார்! அவரைத் தட்டிக்கேட்கும் துணிவு, எவருக்குமே காணோம். படேல் உபசார மொழி பேசுகிறார். மற்றவர்கள் திகைத்துப் போயுள்ளனர்.

புதிய தொழில்களை அமைக்கும் சக்தி எம்மிடம் இருக்கிறது, ஆனால், அதனை உபயோகிக்க மாட்டோம், என்று பச்சையாகப் பேசுகிறார் தலால்.

எகாதிபத்யத்துக்குக்கூட இல்லாத மிடுக்கு, தலாலுக்கு இருக்கிறது. நேரு சர்க்காரை, கோடியாகவே போருக்கு அழைக்கிறார்!

நாட்டுவிடுதலை என்றால், மக்களின் விடுதலை என்றும், எகாதிபத்ய ஒழிப்பு என்றால் சுறண்டிப் பிழைக்கும் கூதமியினர் எல்லோருடைய ஒழிப்புமாகும் என்றும் எண்ணி காங்கிரசில் பணியாற்றிய வீர இளைஞர்கள், என்ன சொல்கிறார்கள் இதற்கு?

முதலாளிமார்களுக்கு வீண்தொல்லை தராமல், பொது உடைமைக்காரர்களின், ஏசலுக்கு அவர்கள் ஆளாகாதபடி பார்த்துக்கொண்டு அவர்களின் மனிதாபிமானத்துக்கும் நாட்டுப்பற்றுக்கும், மனுச்

செய்து கொண்டால், அவர்களே மனம் மாறி, தொழிலையும் வளமாக்கி, தொழிலாளரையும் வாழவைத்து, நாட்டிலே புதிய பொலிவு உண்டாகச் செய்வர், என்று நம்பியே, இதோபதேசம் செய்து வருகிறது நேரு சர்க்கார், என்றுபேசித் திருப்திப்படும் அன்பர்கள், தலாலின் பேச்சுக்குப் பிறகுமா, இந்தத் 'தட்டிக் கொடுக்கும்' போக்கிலே நம்பிக்கை கொள்ளப் போகிறார்கள்?

புலியின் கழுத்திலே பூமாலை சூட்டினால், பூரிப்படைந்து, இனிப் புல்லைத் தின்பேன், புள்ளிமானின் இறைச்சியை வேண்டேன், என்று கூறும், என நம்பின கதைபோல, முதலாளிகளின் மனம் நோகாதபடி, முகம் கோணாதபடி நடந்து கொண்டால், அவர்களே பெரிய மனது வைத்து, நாட்டை வளமாக்குவார்கள், என்று கூறி வந்தனரே, சமதர்ம நாவினர்; அவர்கள், தலாலின் பேச்சைக் கேட்ட பிறகு, என்ன எண்ணுகிறார்கள்? எப்படி, தலாலின் திமிரான போக்கை அடக்கப் போகிறார்கள்? திட்டம் என்ன?

பாட்டாளி படும்துயரம் எமக்குத் தெரியும். அவன் நிலை உயரவேண்டும், உரிமை காக்கப்படவேண்டும் என்பதும் எமக்குத் தெரியும். தொழில்கள் பொதுமக்களுக்குச் சொந்தமாக வேண்டும், என்பதும் எமக்குத் தெரியும். இந்த இலட்சியங்களை நாங்கள் மறந்துவிடவில்லை. இந்த இலட்சியங்களுக்காகவே நாங்கள் பாடுபடுகிறோம். இந்த இலட்சிய சித்திக்காக, மாஸ்கோ தயவு தேவையில்லை, மார்க்சின் தயவும் தேவையில்லை, கம்யூனிசம் வேண்டாம், எந்த இசமும் வேண்டாம், நாம் நமது பண்பாட்டுக்கு ஏற்ற விதமாக, சமதர்மத்தை அமைத்துக்காட்டுகிறோம்—அஞ்சற்க—ஆனால் சில காலத்துக்கு இது பற்றிப் பேசற்க!—உற்பத்தி பெருகவேண்டும் என்பதே முதல் வேலை—இதற்காகத் தான் இப்போது, முதலாளி-தொழிலாளி சச்சரவு, வேலைநிறுத்தக், கிளர்ச்சிகள் கூடாது, என்று கூறுகிறோம், சந்தேகிக்க வேண்டாம்—முதலாளித்தவ ஒத்துழைப்பு வேண்டும், அதற்காகவே இப்போது, இலட்சியத்தைக் கூட மறந்தது போல் இருக்கிறோம்—என்று பேசிவரும் நேரு சர்க்கார், இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்—எந்த உற்பத்தி பெருக்க நோக்கத்துக்காக, முதலாளிகளின் ஆதரவைக் கோருகிறார்களோ, அந்தக் காரியத்தை ஆதரிக்க முடியாது—இலாப வேட்டைக்குத் தங்கு தடையற்ற உரிமையும், நிரந்தர உயிரும் இருக்க வேண்டும், இல்லையானால், உற்பத்தி பெருகாது—புதிய தொழில்களும் உருவாகாது என்று உறுமிவிட்டாரே, தலால், இனி என்ன செய்யப் போகிறது, நேரு சர்க்கார்!

உற்பத்தியும் பெருகாது! புதிய தொழிலும் உண்டாகாது! தொழிலாளி துயரும் நீங்காது! பொருள்கள் கிடைக்காத தொல்லையும் ஒழியாது! வாழ்க்கைத்தரமும் உயராது!—இதுதானே நிலைமை, தலால் கூறுகிறபடி, முதலாளிகளின் வேலை நிறுத்தம் வெற்றி பெற்றால்!

பாட்டாளியும் பணியவேண்டும்—சர்க்காரும் பணியவேண்டும்—தலால் கூறுகிறார்!

கண்ணீர் விடுகிறனு? கருணை காட்டாதே!—என்று சர்க்காருக்குக் கட்டளையிடுகிறார்.

டில்லியை நோக்கி மாஸ்கோ சிரிக்காமல் என்ன செய்யும்!

ஏழைபங்காளர்கள்—தலால் தர்பாருக்காகவா, தடியடிபட்டோம், என்பதை, காங்கிரஸ் உண்மை ஊழியர்கள்-ஊராள்வோர்அல்ல—எண்ணிப்பார்க்கவேண்டும்.

"இச்சபையின் அபிப்பிராயத்தில், பாரதமக்களின் கொடியதரித்திரமும், துன்பமும், வெளிநாட்டார் சுரண்டுதலால் மாத்திரம் ஏற்பட்டவைகளல்ல. சமூகத்தின் பொருளாதார அமைப்பும் அதற்குக் காரணமாய் இருக்கிறது. நம் சுரண்டுதல் அதிக காலத்துக்கு நடக்கும் பொருட்டு அன்னிய அதிபர்கள் இந்நாட்டுப் பொருளாதார அமைப்பைக் காப்பாற்றுகிறார்கள். ஆகையால் இந்திய மக்களின் தரித்திரத்தையும் துன்பத்தையும் நீக்குவதற்காகவும்—அவர்களின் நிலைமையைத் திருத்துவதற்காகவும் மிகவும் மோசமான உயர்வு தாழ்வுகளை ஒழிப்பதற்காகவும், தற்காலத்திய பொருளாதார சமூக அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்."

* * *

மிகவும் அவசியம்!—வெறும் அவசியம் கூட அல்ல!! இந்தத் தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது. பம்பாயில். 1929ம் ஆண்டு. 19 ஆண்டுகளுக்குப் பிறகு நேரு சர்க்காரின் நாட்களிலே அதே பம்பாயில், தலால் தர்பார் நடத்துகிறார்! நியாயமா?


## அறிவிப்பு

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்" 0—12—0

"சிந்தனை விருந்து" 0—4—0

இரண்டுநூல்களுக்கும் ஒரு ரூபா இரண்டணா முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். மொத்த விற்பனையாளர்கள் 25% கழிவுநீக்கிமுன் பணம் அனுப்பவேண்டும். வி. பி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

பரிமளம் பதிப்பகம்.
காஞ்சிபுரம்.


## ஆமை வேகம்!

கடந்த பெரும்போரின்போது, நேரிட்ட சேதங்களுக்கு நஷ்டஈடுபெறும்முறையில், ஜெர்மனி, ஜப்பான், ஆகிய நாடுகளிடமிருந்து, நேசநாடுகள், பெருந் தொகை பெற திட்டம் தயாரித்தனர்—பலமுறை கூடிப்பேசி, புள்ளிவிவரங்கள் தயாரித்து. இம்முறையில் சென்னை மாகாணத்துக்கு நஷ்டஈடுத் தொகை இவ்வளவு என்று, குறிப்பு எடுத்தனர். பணமாகவோ அல்லது, பணத்தின் மதிப்பளவுக்கு ஏதேனும் யந்திரங்களோ, பெறலாம் என்றும், ஏற்பாடு இருக்கிறது.

ஆண்டு மூன்று ஆகிறது, இந்த ஏற்பாடு பேசப்பட்டு, ஆனால் இன்னமும் அரை பைசாகூட வந்து சேரவில்லை! ஆளவந்தார்களின் நிர்வாகத் திறமைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. ஜெர்மனி, ஜப்பான், ஆகிய இருநாடுகளிலிருந்தும், அருமையான, தொழில்வளர்ச்சிக்குத் தேவையான விஞ்ஞானக் கருவிகளைப் பெற்றிருந்தால், எவ்வளவோ பலன் கிடைத்திருக்கும். ஆனால் மூன்று ஆண்டுகளாக, ஆமை வேகத்திலே, காரியம்நடைபெற்று வருவதால், பணமும் கிடைக்கவில்லை, பணத்துக்கும் பதிலாகப் பொருளும் பெற முடியவில்லை.

1945, அக்டோபரில், மத்திய சர்க்கார் சென்னை சர்க்காரைக் கேட்டார்கள், சென்னை மாகாணம், எவ்வளவு தொகை கேட்கிறது நஷ்ட ஈடாக, என்று, தந்தி மூலம் தகவலைத் தரச் சொன்னார்களாம் உடனே, இங்கு, புள்ளி விவரம் தயாரித்து ஜப்பானால் விளைந்த சேதத்துக்காக, சென்னை மாகாணத்துக்கு, ஐந்தரை கோடி ரூபாய், நஷ்ட ஈடு தரவேண்டும் என்று, டில்லிக்குத் தெரிவித்தனர். பணமாக, இந்த நஷ்டஈடுத்தொகையைத் தர முடியாவிட்டால், இரு நெசவாலைகளுக்குப் பயன்படக்கூடிய, நவீன யந்திரங்களாகத் தருவதானாலும் நல்லது, என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

1945ல் இந்தச் சம்பவம். 1948 முடியப்போகிறது, இன்னமும், ஐந்தரைக் கோடி ரூபாயில், அரை ரூபா கூட வந்து சேரவில்லை, ஒரு விதமான யந்திரமும் கிடைக்கவில்லை. எவ்வளவு சுறுசுறுப்பாகவும் திறமையுடனும், 'நம்ம' சர்க்கார் வேலை பார்க்கிறது என்பதையும், டில்லி சர்க்கார், நமது மாகாணத்திடம் காட்டும் அக்கரை எப்படி இருக்கிறது என்பதையும் பாருங்கள். இந்த இலட்சணத்தில், ஒரு தனி விமானமே இருக்கிறது, டில்லிக்குப் போகவர!! ஏன், இவ்வளவு மந்தமாக இருக்கிறார்கள்? ஐந்தரைக்கோடி ரூபாய்க்கு அருமையான, யந்திரங்களைப் பெற்றுப் பயன்படுத்தி இருந்தால், எவ்வளவு, தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். மூன்று ஆண்டுகளாகமூலையில்கட்டிப் போட்டு வைத்திருக்கிறார்கள், கணக்குப் புத்தகத்தை!

## சோதியே சுடரே!

4-ம் பக்கத் தொடர்ச்சி

லாமற்போயினும், இவ்வுலகில், பிராமணர்களுக்குச் செய்கின்ற பூஜை உனக்குச் சாரும்படி வரமளித்தேன் போ” என்று கூறி ஆசீர்வதித்தார்.

அதன்பின்னர், தம்முடைய ஆணையால் உண்டாக்கப்பட்ட நெருப்பு வடிவான மலையைச் சிறிய வடிவமாகக் கடவது என்று கட்டளையிட்டார். அதனைக் கண்ட திருமாலும் நான்முகனும் சிவனை நோக்கி, “தங்கள் ஆணைப்படி இந்த நெருப்புமலை குறுகிற்றாயினும் இதன் ஒளி எவராலும் பார்க்க முடியாதபடி இருப்பதால், இதனை ஒளியற்ற சாதாரண மலையாக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி சிவன் அதனை ஒரு சாதாரண மலை வடிவமாகச் செய்தார் அது கண்ட நான்முகனும் திருமாலும் சிவனை நோக்கி, “இஃது நெருப்பு மலையாக இருந்ததென்பதற்கு அறிகுறியாக இந்த மலையின் உச்சியில் எந்த நாளும் ஒரு ஒளிதெரியும்படி செய்ய வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கும் இசைந்த சிவன், அவர்களை நோக்கி, “உங்கள் விருப்பப்படியே ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நாளில் இம்மலையின் உச்சியில் தானாகவே ஒரு ஒளி தோன்றும்படி செய்வோம்; அவ்வாறு தோன்றும் தீபஒளியைக் காண்பவர்கள் உலகத்தில் பசியும் வியாதியும் இல்லாமல் நிலைபெற்று வாழ்வார்கள்” என்றுதிருவாய்மலர்ந்தருளினார். இவ்வளவே திருவண்ணாமலைத் தீப ஒளியைப் பற்றிக் கூறப்படும் புராண உண்மைகளாகும்.

ஆனால், இன்று திருவண்ணாமலையில் நடப்பதென்ன? சிவனாரின் கட்டளைப்படி, அங்கு தீப ஒளி தோன்றுகிறதா என்றால், ஆம் என்பர் ஆத்திகர். நாம் இல்லை என்கிறோம். எனவே, எம்மை நாத்திகர் என்று நம்பனடியார்கள் கூறுகின்றனர். திருவண்ணாமலையிலே, கார்த்திகை மாதத்திலே, கிருத்திகை நாளிலே மலை உச்சியில் காணப்படும் தீப ஒளியை நீங்கள் பார்த்ததில்லையா என்று எம்மைக் கேட்டால், நாம், பார்த்தோம், ஆனால் அந்த தீப ஒளி, ஆண்டவன் அருளால் தானாகத் தோன்றும் ஒளி அல்லவென்றும், அங்கு இப்போது காணப்படும் தீப ஒளி நம் போன்றவர்களால் ஏற்றப்படும் போலிஒளி என்றும் கூறினால், ஏனோ நம்மை இந்த ஆத்திகர் குழு நாத்திகர் என்று அழைக்கிறது? நான்முகனின் நயவஞ்சகத்தையும், தாழம்பூவின் பொய்யையும் விட இந்த ஆத்திகர் குழு செய்யும் காரியம் ஆயிரமடங்கு நயவஞ்சகமும் பொய்யும் நிறைந்ததாக இருக்கிறதே என்று நாம் கூறினால், சிலர் நம்மைப் பார்க்கும் பார்வை, அந்தத் திரிபுர தகனியின் கோபப் பார்வையை விடக் கொடுமை நிறைந்ததாக வன்றோ காணப்படுகிறது!

திருமாலுக்கும் நான்முகனுக்கும் சிவன் வாக்களித்தபடி திருவண்ணாமலை உச்சியில் ஒரு தீப ஒளி தானாகத் தோன்றுவதுமில்லை, அவர் திருவாய் மலர்ந்தருளியபடி, அந்தத் தீப ஒளியைக் காண்பவர்கள் நோயும் பசியுமில்லாத வாழ்க்கையை நடத்தவுமில்லையே! எங்கு பார்த்தாலும் பசியும் பட்டினியும் தாண்டவமாடுகிறதே! இவ்வாண்டேத்தீபஒளியைப் பார்க்க வருகின்றவர்கள் தங்கள் தங்கள் உணவுக்குப்போதிய அரிசியை அவசியம் கொண்டேவரவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதே! அதுமட்டுமல்ல, திருவண்ணாமலையில் காலராநோய் இருப்பதால் அங்கு மக்கள் கூடக்கூடாதென்றும் சர்க்கார் கட்டளை பிறப்பித்திருக்கிறதே! தீபஒளியைப்பார்த்தால் பசியும்நோயும் பறக்கும் என்று பரமன் திருவாய் மலர்ந்தருளினார் அன்று. இன்று திருவண்ணாமலைத் தீபத்துக்குப் போனால் பசியும் நோயும் வாட்டும்—எனவே, அங்கு செல்லாதீர்கள் என்று சர்க்கார் திருவாய்மலர்ந்தருளி இருக்கிறதே! இவ்விரண்டு திருவாய் மலர்ந்தருளுதலையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் எவராவது, இப்படியிருக்கஎன் அப்படி ஒரு புராணம் நாட்டில் இருக்கவேண்டும் என்று கேட்டால், நல்லபாம்பாகிவிடுகின்றது இந்தநம்பனடியார் குழு!

இனி, நெருப்பு அல்லது விளக்கொளி எப்படி எப்போது ஏற்பட்டதென்பதை இயற்கையோடு ஒப்பிட்டுக் கூறினால், நெருப்பு வடிவினராகச் சிவனை வணங்கும் அன்பர்கள் இன்னும் என்னென்ன கூறுவார்களோ, யார் கண்டார்கள்.

மக்களின் வாழ்க்கைத் துறைக்குப் பயன்படும் பொருள்கள் பலவற்றுள், இன்றியமையாதனவாகக் கொள்ளப்படுவனவற்றில் இவ்விளக்கும் ஒன்றாகும். உலகில், அது, ஏற்றப்படும் இடங்களிலுள்ள இருளைப் போக்கி, ஒளியைத் தந்து, மக்கட்குப் பயன்படும் இவ்விளக்கும் முன்னர்க் காலம் போலன்றி, வரவரச் சீர்திருத்தம் அடையப் பெற்று, இப்போது நினைத்தவுடனேயே ஒளியைப் பெறக்கூடிய அத்துணை உயர்ந்த நிலையை அடைந்துள்ளதென்பதை யாவரும் தெள்ளிதிலறிவர். மக்கள், மாக்கள் இயல்போடு அதாவது நாகரிகம் பெறாத விலங்குத் தன்மையில் இருந்த மிகப் பழைய காலத்தில், அவர்களுக்கு இவ்விளக்கு வேண்டப்படாதிருந்ததென்பது மட்டுமன்றி, விளக்கென்ற ஒரு தனிப்பொருள் இல்லாமல் இருந்ததோடு, விளக்கினால் அவர்கள் அடையக்கூடிய சிறந்த பயனையும் அறியமுடியாத அத்துணைக் கீழ் நிலையிலேயே இருந்தனர் என்பதனையும் உலக வரலாற்றுண்மையை அறிந்தோர் நன்குணர்வர். விளக்கைப் போலவே, மக்களால் இஞ்ஞான்று கையாளப்பட்டு வரும் பொருள்கள் பல, அக்காலத்தில் இல்லாமலும், இருந்தாலும் அவை அவர்களுக்கு வேண்டப்படாமலும், வேண்டப்பட்டாலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் முறை தெரியாமலுமே இருந்தனர் என்பதனையும் மெய்யுணர்வு மிக்க அறிஞர் ஒப்புக்கொள்ளாதிருக்க முடியாது.

இனி, விளக்கினாற் பெறக்கூடிய ஒளியை மக்கள் முதன் முதல் எப்படிப் பெற்றனர் என்பது பற்றியும் ஒரு சிறிது கூறி, இதனை முடிப்பதே எடுத்துக்கொண்ட பொருளுக்குப் பொருத்தமாகவும், ‘கார்த்திகை விளக்கு’ப் பற்றி ஈண்டெழுதப்படும் உண்மைகளைக் கண்டு ஐயுறுவார்க்கு அவ்வையப்பாட்டை நீக்கித் தெளிவடையச் செய்வதாகவும் அமையும். என்னையெனில், சைவர்களாற் கடவுள் நிலையில் வைத்து வழிபடப்படுஞ் ‘சிவன்’ நெருப்பு வடிவினன் என்று கூறப்படுவதுமன்றித், திருவண்ணாமலையில், பிரம விட்டுணுக்களுக்கு ஏற்பட்ட உயர்வு தாழ்வுச் சண்டையைத் தீர்த்து உண்மையை விளக்க வந்ததாகச் சொல்லப்படுஞ் சிவன் நெருப்பாகவே தோன்றினான் என்றும் கூறப்படுவதால் எங்க அதுவேயுமன்றிச், சிவனுக்கு ஒப்புடைமை பேசப்போதெல்லாம், நெருப்பையே சான்றாக எடுத்துக்

காட்டுதல் சைவர்களின்வழக்கமுஞ், சைவ சமய நூற்களின் துணிபுமாகலானும், 'சோதியேசுடரே சூழொளி விளக்கே,' 'வானோர் செழுஞ் சுடரே,' 'நெருப்பான மேனியர்,' 'தீ வண்ணன்' என்பனபோன்ற சொற்றொடர்களே யாம் கூறும் இவ்வுண்மையினை நன்கு வலியுறுத்தலானும், நெருப்பு அல்லது விளக்குப்பற்றி முதற்கண் ஆராய்வது ஈண்டைக்குப் பெரிதும் இன்றியமையாததாகும்.

எனவே, நெருப்பென்பது, ஐம்பெரும் பருப்பொருள்களில் ஒன்றாகும். உயிரோடு கூடிய உடம்புகளைப் பெறுவதற்கு, மண்-புனல்-அனல்-காற்று, வெளி என்று சொல்லப்படும் இவ்வைம்பெரும்பருப்பொருள்களே தாம் கருவிகளாகவுள்ளன. ஆனால் இவ்வைந்து பொருள்களில் ஒன்றான நெருப்பு அல்லது அனலானது முதலிலிருந்தே ஒளியைத் தருகின்ற விளக்கு வடிவில் இருந்ததில்லை என்பதும்; ஒளியைத் தனியாகப் பிரித்துக்காட்டாத வெப்புத் தன்மையினதான ஒரு பருப்பொருளாகவேதான் இருந்ததென்பதும்; அவ்வெப்புத் தன்மையினின்றும் நெருப்பு அல்லது வெளிச்சத்தை உண்டாக்கலாம் என்ற உண்மையினை, மக்கள் சிறிது நாகரிகமடைந்த மிகப் பிற்பட்ட காலத்தே தான் அவர்கள் கண்டுபிடித்தனர் என்பதும்; அங்ஙனம் கண்டுபிடிக்கப்பட்ட நெருப்பும், முதன் முதல், காடுகளில் உள்ள மூங்கில் போன்ற கடினமான மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதனாலேயேபெறப்பட்டதென்பதும்; அதன் பின்னர், விலங்கியல்போடு காடுகளில் வாழ்ந்திருந்த மக்கள், சிறிது நாகரிகமடைந்து நாட்டு வாழ்க்கையைக் கண்டுபிடித்து அதனை மேற்கொண்ட காலத்தில், வெளிச்சத்தை உண்டாக்குவதிலுஞ் சிறிது நாகரிகத்தைப் பெற்றவர்களாய்ச், சக்கிமுக்கி அதாவது கற்களை ஒன்றோடொன்று உராய்ப்பதனால் நெருப்பை உண்டாக்கலாம் என்ற உண்மையினைக் கண்டு பிடித்தார்கள் என்பதும்; மேல்நாட்டவர் நெருப்பை உண்டாக்குவதற்காகக் கண்டுபிடித்த தீக்குச்சி போன்ற வியத்தகு கருவிகள் நம் நாட்டுக்கு வரத்தொடங்கிய மிக அண்மைக் காலம்வரை, கற்களையும் மரங்களையும் ஒன்றோடொன்று தேய்ப்பதன் வாயிலாகவே நம்மவர் நெருப்பை உண்டாக்கி வந்தனர் என்பதும் யாவராலும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

எனவே, இந்த உலகத்தையும் இதிற் காணப்படும் பொருள்கள் அனைத்தையும் கடவுள் என்று சொல்லப்படும் ஒரு கருவியே படைத்ததென்ற மதத்தலைவர்களின் பெருவழக்கு மேற்காட்டிய உண்மையால் பொய்யாய்ப் போதல் காண்க. காணவே, சைவர்களாற் கடவுள் நிலையில் வைத்து வழிபடப்படுஞ் சிவன் நெருப்பு வடிவினன் அல்லது நெருப்பாய்த் தோன்றுபவன் என்ற கூற்றும் பொய்யாதல் பெறப்படும். எப்படியென்றால், நெருப்பு அல்லது வெளிச்சம் என்ற ஒரு ஒளியைத் தரும் பொருள், உலகந் தோன்றிய நாளிலிருந்தே இருந்ததில்லை என்பதும், உலகம் நாகரிகமடைந்த மிகப் பிற்பட்ட காலத்தே தான், மக்களின் முயற்சியாலும் அறிவுத்திறத்தாலும் இவ்வொளியைப் பெறும் முறை கண்டுபிடிக்கப்பட்டதென்பதும் மறுக்க முடியாத உண்மையாய்க் கொள்ளக் கிடப்பதால், உலகந் தோன்றுவதற்கு முன்னிருந்தே, என்றைக்கும் அழியாப் பொருளாய் இருப்பதாகச் சொல்லப்படுஞ் சிவனுக்கு ஒளி அல்லது நெருப்பு வடிவம் கற்பித்தல் ஒருவடிகட்டிய முழுப்பொய்யேயன்றி ஒரு சிறிதும்உண்மையாகாது. ஐம்பெரும் பருப்பொருள்களில் ஒன்றான அனலானது முதலிலிருந்தே ஒளி வடிவில்லாமல் வெப்புத் தன்மையாய் மட்டும் இருந்ததென்பதும், மக்கள் நாகரிகமடைந்த மிகப் பிற்பட்ட காலத்தில் தான் அதற்கு ஒளிவடிவம் உண்டானதென்பதும், அதுவும் மக்களின் அறிவோடுகூடிய முயற்சியால்தான் ஒளி கண்டுபிடிக்கப்பட்டதென்பதும் யாதொரு ஐயுறவுக்கும் இடமின்றி அறியக் கிடப்பதால், தான்தோன்றியாகப் பேசப்படுஞ் சிவன் இயல்பாகவே நெருப்பு வடிவினன் என்பாருரை வெறும் போலியாம் என்று ஒழிக. சிவனுடைய யாக்கை அனல் வீசும் அத்துணை வெப்புத் தன்மையாய் இருந்தது; ஆகலால், அவனை நெருப்பு வடிவினன் என்று அழைப்பது பொருந்துமென்று கூறின், அதனை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். எப்படியென்றால், சைவர்களால் கடவுள் நிலையில் வைத்து வழிபடப்படுஞ் சிவன் என்பான், சிற்றின்ப நுகர்ச்சியில் பெரிதும் விருப்பமுள்ளவன் என்பது, அவன் ஒரு காலத்தில், தனது வாழ்க்கைத் துணைவியான உமையம்மையோடு ஒரு பூம்பொழிலில் உலாவிக் கொண்டு இருந்தான் என்றும், அப்பூம்பொழிலில் இருந்து உண்டான நல்ல தென்றலானது அவனைச் சிற்றின்ப நுகர்ச்சியில் ஈடுபடுத்திற்றென்றும், அதனால் அளவு கடந்த சிற்றின்ப உணர்ச்சியைப் பெற்ற சிவன், நீண்ட நேரத்திற்கு அவ்வின்பத்தை நுகர எண்ணி, அதற்காகத் தான் ஒருஆண் யானையாகவும்,உமை ஒரு பெண் யானையாகவும் வடிவெடுத்து, வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளுபவராகச் சொல்லப்படுஞ்சிவன், தமக்கு வேண்டியமட்டும் அவ்வின்பத்தை நுகர்ந்து மூத்த கடவுள் என்று சொல்லப்படும் பிள்ளையாரைப் பெற்றெடுத்தான் என்றும் ஒருகதை உளதாகத் திருஞானசம்பந்தர் தமது 'பிடியதன் உரு' என்ற தேவாரத்தால் விளக்கியுள்ளார்.

இனி, இளைய கடவுளாகப் பேசப்படும் முருகனைப் பெற்றெடுப்பதற்காக அந்தச் சிவன் ஆயிரம் தேவயாண்டுகள் இராப்பகல் ஓய்வில்லாமல் அதே வேலையாக இருந்தனன் என்றுஇன்னொரு கதையும்;மோகினி வடிவில் வந்த திருமாலை அந்தச் சிவன் ஒருகாலத்தில் துரத்திச் சென்று அவளைப் புணர்வதற்கு முந்தியே சிவனுடைய ஆண்குறியினின்றும் வெண்ணீர் (சுக்கிலம் அல்லது இந்திரியம்) கீழே ஒழுகிற்றென்றும், அங்ஙனம் ஒழுகிய வெண்ணீரைச் சிவன் தமது கையிலேஏந்தி, ஐயனார் எனப்பெயரிய ஒரு கடவுளை உண்டாக்கினார் என்று பிறிதொரு கதையும்; பெரியபுராணத்திற் பேசப்படும் இயற்பகை நாயனார் என்பவருடைய மனைவியைத் தமக்கு மனைவியாகத் தரும்படி கேட்டுப்பெற்றுக்கொண்டு போனார் அந்தச் சிவன் என்று பிறிதொரு கதையும்; திருவண்ணாமலையில் இருந்த வல்லாள மன்னனிடஞ் சென்று தான் புணர்வதற்கு ஒரு பெண் வேண்டுமென்று அவனிடம் அந்தச் சிவன் கேட்டதாகவும், அம்மன்னன், வேறு பெண்கள் எவரும் அகப்படாது போகவே தனது மனைவியையே அந்தச்சிவனுக்குக்கொடுத்தான் என்று மற்றுமோர் கதையும், சைவத்தின் மாண்பையும் சிவப்பெருந்தகையின் மேன்மையையும் எடுத்துக்கூறுஞ் சைவப்பெரு நூல்களிற் காணக்கிடப்பதால், சிவன் என்பான் சிற்றின்ப உணர்ச்சியில்

பெரிதும் ஈடுபட்டவன் என்பதும், அதனால் அவனுடைய உடம்பு, வெட்டைச்சூடு முதலான வெப்பு நோயால் தாக்கப்பட்டு அனல்வீசுஞ் தன்மையாய் இருந்த காரணத்தால் அவனுக்கு நெருப்பு வடிவம் கற்பித்தது, தவறாகாதென்பதைப் பகுத்தறிவுடைய உலகம் ஒப்புக்கொள்ளும் என்பதில் எவரும் ஐயப்பட வேண்டியதில்லை. மற்று, உண்மையாகவே சிவனுக்கு ஒளிவடிவம் கற்பிக்கும் கசடருரையைக்கருத்துள்ள உலகம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது.

அன்றியும், இன்று திருவண்ணாமலையில் நடைபெறும் விளக்கொளி விழாவுக்காகச் செலவிடப்படும் பெருந்தொகைப் பொருளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, நாட்டில் தாண்டவமாடும் பசிப்பிணியும் நோயும் எப்படி நீங்கும் என்பதைச் சிறிதளவு பகுத்தறிவுடையாரும் எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியுமா? இந்தப்போலி விளக்கொளியைக் காண்பிப்பதற்காக எத்தனை குடம் பசுநெய் (எருமைநெய்கூட அல்ல,) எத்தனை கெஜம் கோடித்துணி பாழாக்கப்படுகிறது என்பதை நேரில் பார்க்கும் எவரும், பசியே உருவெடுத்த ஒரு நாட்டில், நோயே குடிகொண்ட ஒரு நாட்டில் இனியும் இத்தகைய பணத்தைப் பாழாக்கும் விழாக்கள், அவை கடவுள் பேரால் செய்யப்பட்டாலும் —கனதனவான்களின் காசுகொண்டு செய்யப்பட்டாலும் — ஆளவந்தார்களின் ஆதரவுகொண்டு செய்யப்பட்டாலும், வேண்டாம் இந்த வீண்வேலை யென்றேகூறுவர். என்றாலும், அவனடி மறவா அபிநய அன்பர்கள், 'எல்லாம் அவன் செயல், நம்மாலாவது ஒன்றுண்டோ' என்று பஜனை பாடிக்கொண்டுதான் இருப்பார்கள். ஆனால்................!

# "பிரிக்கவேண்டும்"

'குறுகிய நோக்கினர்—கோணல் மதியினர்—பதவி பித்தினர்—துரோகச் சிந்தையினர்' இவ்வாறு அர்ச்சிக்கப்படுகின்றனர் காங்கிரஸ் மேலிடத்தால், டாக்டர் பட்டாபி, கொண்டா வெங்கிடப்பய்யா, பேராசிரியர் இரங்கா முதலியவர்கள்.

'ஹிட்லரிசம்—பாசீசம்—ரஜ்வீசம்' பிரிக்கப்படவேண்டும்—மொழிவழி மாகாணம் அமைக்கப்படவேண்டும் என்று கேட்போரைப் பார்த்து கனல் கக்குகிறார் கே. எம். முன்ஷி!

'மூடத்தனம் — பொய்யர்கள்—நன்றியற்றவர்கள்' என்று பதில் கிளம்புகிறது, தனி மாகாணக் கோரிக்கைக் காரர்களிடமிருந்து!

* * *

'பிரிவினை வேண்டும்' என்ற மூல மந்திரம், மற்றவர்களால் பேசப்படுவதைக் காட்டிலும், உரத்து உச்சரிக்கப்படுகிறது பெரும் பெரும் தேசபக்தர்களால். இதனைப் பெருங்குரலெடுத்து மறுக்கிறவர்களும் தேசபக்தர்கள்தான்! தலைவர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டவர்களிடையே இவ்வளவு பலமான குழப்பம் இருப்பதைக் கண்டு, வயலிலே வேலை செய்யும் வரதனும், தொழிற்சாலையிலே உழைத்து உருக்குலைந்து கிடக்கும் உலகப்பனும், குழப்பத்தின் முழு உருவம் தெரியாமல் திகைக்கிறார்கள். தலைவர்களுக்குள்ளே குழப்பம், மக்களுக்குள்ளே மலைப்பு, இந்தச் சூழ்நிலையில் சூதுமதியினர் சிலர் கூடிக்கொண்டு சுயராஜ்ய சாசனம் துரிதமாகத் தயாரித்துக்கொண்டு உள்ளனர்!

இந்தப் பிரிவினை மனோபாவம், வெள்ளையர் வந்தபோதும், ஆண்டபோதும், வெளியேறினபோதும், பின்னரும், இன்றும் இருந்துகொண்டுதான் இருந்தது — இருக்கிறது என்பது மட்டுமல்ல, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டும், உரம்பெற்றுக்கொண்டும் வருகிறது.

பல மொழியினரை — பல மதத்தினரை—பல இனவழி வந்தவரை—வேளா வேளையில்கிடைத்த—வெற்றியின் பயனாகக்கிடைத்த நிலப்பரப்பினை, ஒன்றாக்கி, மாகாணம் என்று பெயர் சூட்டி, தங்களுக்கு ஏற்ற வகையில் நிர்வாக வசதி செய்துகொண்டு ஆண்டனர் வெள்ளையர், ஒரு நூற்றாண்டுக்கு அதிகமாக. பற்பல இயற்கைக் காரணங்களால் மாறுபட்டுக் கிடப்பவர்களைப் பிணைத்து வைத்திருந்தும், பிரிவினைப் பண்பாடு மறையவில்லை—மாற்றமுறவில்லை—மங்கியும் போகவில்லை. மக்கள் என்னும் பொது உணர்வோ, 'இந்தியன்' என்னும் எண்ணமோ ஏற்படவில்லை — ஏற்படுத்த முடியவில்லை.

அஸ்ஸாமியர்கள், வங்காளியர்களை வெறுக்கிறார்கள். பீகாரிகள், வங்காளிகளோடு பிணங்கிக் கொள்ளுகிறார்கள். மராட்டியர்கள், குஜராத்தியர்களிடமிருந்து தனித்து வாழ விரும்புகிறார்கள். ஒரே மொழியை மூலமாகக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், ஒரே இனவழி வந்தவர்கள், ஆரியமொழி புகுந்து செய்துவிட்ட அனர்த்தத்தின்காரணமாக, அடிப்படையில் எள்ளளவு முரண்பாடு இல்லாமல் இருந்தும்கூட, தமிழர்கள் — ஆந்திரர்கள்—மலையாளிகள்—கன்னடர் ஆகியதிராவிட இனத்தைச்சேர்ந்தவர்களிடை, அவசியமற்ற சந்தேகமும் பிணக்கும் ஏற்பட்டு இருக்கிறது வெளிப்படை.

இந்தத் துணைக்கண்டத்தில், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களிடை 'பிரிவினை' உணர்ச்சி வளர்ந்த வண்ணம் இருக்கிறது என்பதை எவராலும் மறைத்துவிட முடியாது. இந்தப் 'பிரிவினை' ஒரு நோயாக இருக்குமானால், இந்தப் பிணியைப் போக்குவதற்கு, காங்கிரஸ் காட்டிய தேசிய மருந்து பலனற்றுப்போய் விட்டதைக் கவனிக்கவேண்டும்.

'பிரிவினை'க்குச் சிலர் மதத்தைக் காரணமாகக் காட்டி பிரச்னையை உருவாக்கினார்கள். இதனை எள்ளி நகையாடிற்று காங்கிரஸ் மேலிடம். 'ஏகாதிபத்தியக் கூலிகளின் செயல் இது' என்று, பிரிவினை வேண்டினோர் முகத்தில் கரி தடவிற்று. பிரச்னையைத் தகர்க்க எடுத்துக் கொண்ட எல்லா நடவடிக்கைகளும், முயற்சிகளும், பிரிவினைக் கோரிக்கைக்கு ஆக்கத்தைக் கொடுத்துவிட்டது. முடிவில் கனவு நனவாயிற்று. பாக்கிஸ்தான் அரசு பகைத்தவர்

களின் ஒப்புதலுடன், ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

'மொழி'யை முன்தள்ளி, இன்று 'பிரிவினை' பேசப்படுகிறது. ஒரே மொழி பேசும் மக்கள், ஒரே நிலப்பரப்பில், அரசு அமைத்து ஆட்சி செய்வதுதான் அறிவியல் வழி என்பது இவர்கள் வாதம். இதனைக் காங்கிரஸ், தனது முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டு இருந்தது.

வெள்ளையரை எதிர்த்துப் போராடக் கிளம்பிய காங்கிரஸ் தலைவர்கள், பல மொழி பேசுவோரை ஒன்றாக்கி ஒரு மாகாணமாகப் பிரித்திருப்பது, கூடாது, பொருந்தாது. இந்தக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ள சேர்க்கை, ஒரு மொழியினர் மீது மற்றொரு மொழியினருக்குப் பொறாமையையும் பகையையுமே வளர்க்கும், ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் மொழியை வளமாக்கிக் கொள்ளவும், கலைச் செல்வங்களைப் பெருக்கிக் கொள்ளவும், இந்தப் பலவந்தச் சேர்க்கை வாய்ப்பளிக்காது, எனவே மொழிவழி மாகாணம் அமைக்கப்படுவதுதான் அறிவிற்குப் பொருத்தமான முறை, பலமொழி பேசும் மக்களிடத்திலும் அன்றுதான் உண்மையான கூட்டுறவை எதிர்பார்க்க முடியும், என்று கூறி, மொழிவழி மாகாணம் அமைக்கப்படுவதின் அவசியத்தை மக்களுக்கு விளக்கினர்.

பல மொழியினரிடை நல்லுறவு ஏற்படுவதைக் குலைப்பதற்கும், ஒருவரோடு ஒருவர் பிளவுபட்டுக் கிடந்தால்தான் தங்கள் பிடி நீடித்துப் பலமாக இருக்கும், என்னும் தீய நோக்கத்தோடுந்தான் ஏகாதிபத்தியம் இந்தத் தகுதியற்ற செயலைச் செய்திருக்கிறது. வெள்ளையர் வெளியேறினதும், இந்த அதர்மத்தைத் துடைத்துவிட்டு, மொழிவழி மாகாணங்கள் ஏற்படுத்துவதுதான் முதல் பணியாக—முக்கிய பணியாகக் கொள்ளப்படும், என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைத்தபோது, பலமொழி பேசுவோரின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு, காங்கிரஸ் தலைவர்கள் கொடுத்தனர் இந்த வாக்குறுதியை. மொழிவழி மாகாணம் அமைந்தால்தான், சுயராஜ்ய இந்தியாவில் சுகவாழ்வு கிடைக்கும் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையையும் மக்களுக்கு ஊட்டினர். மொழிவழி மாகாணம் அமைத்தல் என்னும் எண்ணத்தை மக்கள் உள்ளத்தில் தோற்றுவித்து வளர்த்துவிட்டவர்கள் காங்கிரஸ் தலைவர்களேயாவர். இதன் விளைவாக மக்கள் மொழிவழி மாகாணம் அமைந்துவிட்டால் தங்களுடைய குறைபாடுகள் அனைத்தும் களையப்பட்டுவிடும் என்னும் தவறான ஆசையை வளர்த்துக் கொண்டனர். இந்த ஆசை, அதன் வரம்பைக் கடந்துவிட்டது. ஏகாதிபத்தியப்பிடி நொருக்கப்பட்டதும், தங்கள் கோரிக்கை நிறைவேறிவிடும் என்று நம்பிக்கை கொண்டனர். எனவே, ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முன்னிலும் அதிக ஆர்வம் காட்டினர். விடுதலைப் போராட்டத்திற்கு, மொழிவழி மாகாண அமைப்பு ஆசை புது முறுக்கைக் கொடுத்தது. வெற்றி கிடைத்தது; வெள்ளையர் வெளியேறிவிட்டனர்.

ஆனால்—?

மொழிவழி மாகாணம் ஏற்படவில்லை. அதனைத் தடுத்தொழிக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதுவும், அன்று மொழிவழி மாகாணம் அமைவது, குறிப்பிட்ட மக்களின் மொழிவளர்ச்சிக்கும், கலை ஆக்கத்திற்கும், கல்விப்பெருக்கத்திற்கும், சுகவாழ்விற்கும் அடிப்படைத் தேவை என்று பேசியவர்களாலேயே, மொழிவழி மாகாணம் அமைவது கூடாது என்று பேசப்படுகிறது. அன்று நாட்டுப்பற்று என்று நவிலப்பட்டது, இன்று தேசத்துரோகம் என்று சித்தரிக்கப்படுகிறது. மொழிவழி மாகாணம் அமைப்பதே முதல் பணி—முக்கிய பணி என்று பேசுவோர்களை, அவர்கள் எவ்வளவு தியாகங்கள் செய்தவர்களாக இருந்தபோதிலும், எத்தனை முறை ஏகாதிபத்தியச்சிறையில் தள்ளப்பட்டவர்களாக இருந்தபோதிலும், காங்கிரஸ் மேலிடம் அவர்களை, முன்பின் யோசிக்காமல், கட்டுரை ஆரம்பத்தில் குறித்துள்ளபடி அர்ச்சிக்கிறது!

மொழிவழி மாகாணம் அமைக்கப்படாததால் குறிப்பிட்ட மொழியின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது, அந்த மொழியினரின் கலை ஞானம் கருகிவிட வழி இருக்கிறது, உயர்ந்த பண்பு உருக்குலைந்து விடவும் இடமிருக்கிறது, இதற்குப் பரிகாரமாக ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மொழிவழி மாகாணம் அமைத்தல் என்று முன்பு காங்கிரஸ் மேலிடம் பேசி வந்ததில் உண்மை இருக்குமானால், வெள்ளையர்கள் வெளியேறி விட்டதினாலேயே, அந்த உண்மை பொய்த்துவிடாது. வெள்ளையர்கள் ஆட்சியில்தான் அந்த விளைவு இருக்கும்—'நம்மவர்' ஆட்சியில் அந்த விளைவு இருக்காது என்று பேசுவது அறிவுக்குப் பொருத்தமற்றதாகும்.

வேறு சிலர், குறிப்பாக K. M. முன்ஷி போன்றவர்கள், மொழிவழி மாகாண அமைப்புக் கிளர்ச்சியைப்பொது அறிவுபடைத்தவர்களால் விரும்பத்தகாத முறை என்று கருதப்படும் 'ஹிட்லரிசம், பாசீசம், ரஜ்வீசம்' போன்ற மனிதப் பண்பறியாத மிருகத் தத்துவங்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இவ்வாறு பேசுகிறவர்களில் சிறந்து விளங்கும் K M முன்ஷியின் முன்னாள் சொல்லும் செயலும் எவ்வாறு இருந்தது? டில்லிப் பகுதியிலே ஒரு வேதியர் சிற்றூர் அமைக்கவேண்டுமென்று வீண் முயற்சிச் செய்தவர். வெட்கமின்றி இதனை வெளியில் சொல்லிக் கொண்ட தேச பக்தர், அகண்ட ஹிந்துஸ்தான் கூச்சலின் ஆக்க முதல்வர். இவ்வாறு இவர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில்தான் காங்கிரஸ் மேலிடம், இவர் பேச்சையும்பலத்தையும் புறக்கணித்துவிட்டு, பாக்கிஸ்த்தான் அமைப்புக்கு, ஆங்கிலேயர் குறித்த இடத்தில் கைச்சாத்திட்டது!

மாகுஜரத் என்று முழங்கி, சிதறிக் கிடக்கும் குஜராத்தியர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மாகாணம் அமைக்க வேண்டுமென்று, சில நாளைக்கு முன்பு வரையில் பெரு முயற்சி செய்து வந்த முக்கிய புருஷர் இந்த முன்ஷிதான். ஆனால், இன்று, இதுவரை எது சிறந்தது என்று பிரசாரம் செய்துவந்தாரோ, அதனையே 'பாசீசம்' என்று சித்தரிக்கிறார் இந்தச் சீரற்றவர் சிந்தனையை இழந்து!

இன்று, வேலையில்லையே என்று விம்மினாலும், பசிதணியவில்லையே

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.